க்ரைம் அல்டிமேட் ஸ்டார்

# பட்டுக்கோட்டை பிரபாக

# நாவல் ஸ்பெஷல்



# நீயும் ஒரு இந்தியன்

## பட்டுக்கோட்டை பிரபாகரன்

## 1

பாரதத் தலைநகர் புதுடெல்லியை கடுமையான குளிர் தாலாட்டிக் கொண்டிருந்தது. காலை பத்து மணியாகியும் சீசன் டெல்லிக்கு அணிவித்திருந்த பனி பர்தாவை இன்னும் விலக்கிக் கொள்ளவில்லை. விமான நிலையங்களில் ரன்வே தெரியாமல் பல விமானங்கள் வெளிச்சத்தின் தயவை எதிர் நோக்கி பயணிகளுடன் டெல்லியை இலவச வட்டமடித்துக் கொண்டிருந்தன. மனிதர்களுக்கு ஸ்வெட்டருக்குப் மேல் மற்றொரு ஸ்வெட்டர் தேவையாய் இருந்தது.

மத்திய சிறைச்சாலை

ஆயுள் கைதிகளின் பிளாக்கில் அந்த தனிச்சிறையிலிருந்து அவனுடைய அலறல் விட்டு விட்டு ஒலித்துக் கொண்டிருந்தது.

"அய்யோ! அய்யோ! வலி தாங்க முடியவில்லையே! என்னைக் கொன்று போட்டு விடுங்கள்! ஆ! அம்மா!"

அடர்த்தியான தாடியுடன் மெலிந்த தேகமாய் இருந்த அந்த ஆயுள் கைதி அகஸ்டின் இரண்டு கைகளாலும் தனது வயிற்றைப் பிடித்தபடி வலி தாங்காமல் தரையில் புரண்டு அலறிக் கொண்டிருந்தான்.

கம்பிக்கு வெளியில் இருந்து வார்டர் அதட்டினான், "டேய்! கொஞ்ச நேரம் வலியைப் பொறுத்துக் கொண்டிருக்க முடியாதா உன்னால்? அதான் ஜெயிலர் அய்யாவிடம் தகவல் சொல்லி, அவர் டாக்டருக்கு போன் செய்திருப்பதாகச் சொன்னேனே இல்லையா? டாக்டர் வரும்



வரைக்கும் பொறுமையாக இரு! ஆர்ப்பாட்டம் செய்யாதே!"

"போய்யா! உனக்கு வலி வந்தால்தான் தெரியும். அய்யோ! ஒரு மணி நேரமாக அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கிறேனே, வலி அதிகமாகிக் கொண்டே இருக்கிறது! டாக்டர் வருவதற்கு இவ்வளவு நேரமா? அதற்குள் செத்துப் போய் விடுவேனய்யா! அம்மா! அம்மா!"

அகஸ்டின் கண்களில் இருந்து வேதனை மிகுதியில் கண்ணீர் வழிய உதடுகளை அழுத்தமாகக் கடித்து வலியைப் பொறுத்துக் கொள்ள முயன்றான்.

மேலும் பத்து நரக நிமிடங்கள் கழிந்த பிறகு டாக்டரும் ஜெயிலரும் பூட்ஸ் சத்தம் சரசரக்க வந்து சேர்ந்தார்கள்.

துடித்துக் கொண்டிருந்த அவனை சோதனை செய்யவே இரண்டு பேர் அழுத்திப் பிடித்துக் கொள்ள வேண்டியிருந்தது.

"டாக்டர், டாக்டர், என்னைக் கொன்று விடுங்கள். ஏதாவது ஒரு ஊசி போட்டு என்னைக் கொன்று விடுங்கள். என்னால் வலியைத் தாங்க முடியவில்லை."

ஊசி போட்டுக் கொலை செய்வதற்காக நான் டாக்டருக்குப் படிக்கவில்லை கொஞ்சம் வலியை அடக்கிக் கொண்டு என் கேள்விகளுக்குப் பதில் சொல். எவ்வளவு நேரமாக வலிக்கிறது?"

"ஒரு மணி நேரமாக வலிக்கிறது டாக்டர்"

"விட்டு விட்டு வலிக்கிறதா, இல்லை தொடர்ந்து வலி இருக்கிறதா?"

"தொடர்ந்து வலி இருக்கிறது டாக்டர்"

"ஒரே அளவில் வலி இருக்கிறதா? இல்லை குறைந்து கூடுகிறதா?"

"குறையவே இல்லை டாக்டர். ஒவ்வொரு விநாடியும் வலி கூடிக் கொண்டே இருக்கிறது டாக்டர். தாங்க முடியவில்லை. பேசக்கூட முடியவில்லை" திணறலாக முயன்று முயன்றுப் பேசினான் அகஸ்டின்.

"சரியாக எந்த இடத்தில் வலிக்கிறது? உன் விரலால் தொட்டுக் காட்டு" தன் விரலால் அவன் தொட்டுக் காட்டின இடத்தில் டாக்டர் தொட்டுப் பார்த்தார். தடவிப் பார்த்தார். அழுத்திப் பார்த்தார்.

அவர் அழுத்தியதும் உயிரே போய்விட்டது போல ஒரு பெரிய அலறல் அலறினான் அகஸ்டின்.

டாக்டர் ஜெயிலரிடம் திரும்பி. "இரண்டு வாய்ப்புகள்தான் சார். ஒன்று அப்பெண்டிக்ஸ் எனப்படும் குடல் வாயில் இன்ஃப்ளமேஷன் ஏற்பட்டிருக்கலாம். அல்லது யூரினில் பிளாடரில் ஸ்டோன் ப்ளாக்கேஜாக இருக்கலாம். எக்ஸ்ரே எடுத்துப் பார்த்தால்தான் தெரியும். அப்பெண்டிக்ஸ் பிரச்சினையாக இருந்தால், அது முற்றின நிலையில் இருந்தால் உடனடியாக ஆபரேஷன் செய்யக்கூட வேண்டியிருக்கலாம். தற்காலிகமாக வலியைக் குறைக்க நான் ஊசி போடுகிறேன். நீங்கள் இவனை உடனே ஹாஸ்பிடலில் சேர்த்து விடுவது நல்லது என்பது என் அபிப்ராயம்."

டாக்டர் தன்னுடைய கிட்டைத் திறந்து சிரிஞ்சில் மருந்து ஏற்றி அவனுக்கு குத்தினார். உறக்கத்திற்காக மற்றொரு ஊசியும் போட்டார். இரண்டு மாத்திரைகளை உடனே விழுங்கச் செய்தார்.



டாக்டர் ஜெயிலரோடு திரும்பி நடந்த போது, "இப்போது நான் கொடுத்திருக்கும் ட்ரீட்மெண்ட் இரண்டு இல்லை மூன்று மணி நேரங்களுக்கு அவனை அமைதியாக வைத்திருக்கும்" என்றார்.

"அதற்குள் அவனை அரசாங்க ஆஸ்பத்திரியில் சேர்ப்பதற்கான ஏற்பாடுகளை செய்து விடுகிறேன் டாக்டர், நன்றி" என்ற ஜெயிலர் தனது அறைக்கு வந்து டெலிபோன் எடுத்தார்.

தனது ஏரியா போலீஸ் சூப்பரின்டெண்டைத் தொடர்பு கொண்டு விபரம் சொல்லி, "கைதியின் செக்யூரிட்டிக்காக நீங்கள் எவ்வளவு சீக்கிரம் போலீஸ்காரர்களை அனுப்புகிறீர்களோ, அவ்வளவுக்கு நல்லது. இன்னும் இரண்டு வருடத்தில் ரிடையர்மெண்ட். நம் தாமதப் போக்கினால் ஏதாவது விபரீதம் நடந்து எனக்கு கெட்டப் பெயர் வந்துவிடக் கூடாது பாருங்கள். ஸோ, ஐ ரெக்வெஸ்ட் யூ" என்றார்.

"உடனே ஏற்பாடு செய்கிறேன் சார்"

ஒரு மணி நேரத்திற்குள் ஒரு போலீஸ் சப்-இன்ஸ்பெக்டரும், இரண்டு கான்ஸ்டபிள்களும் மத்திய சிறைச்சாலைக்கு வந்து சேர்ந்தார்கள்.

அசிஸ்டெண்ட் ஜெயிலர் ஒருவரும், போலீஸ் குழுவுமாக, மயக்கமா இல்லை உறக்கமா என்றுப் புரியாமல் குழப்பத்தில் ஆனால் வலி முனகலுடன் இருந்த அகஸ்டினை ஒரு டாக்ஸியில் ஏற்றி அரசாங்க ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வந்து அட்மிஷன் போட்டார்கள்.

எக்ஸ்-ரே அறையில் டெக்னீஷியன் வர வேண்டும் என்றுச் சொல்லி வார்டில் படுக்கை ஒதுக்கிக் காத்திருக்கச் சொன்னார்கள்.

அசிஸ்டண்ட் ஜெயிலரும், சப்-இன்ஸ்பெக்டரும் தத்தம் தொழிலில் உள்ள கஷ்டங்களைப் புலம்பித் தீர்த்துக் கொள்ள ஆளுக்கொரு டீ தேவைப் பட்டது.

டீ குடித்து விட்டு வந்து இரண்டு கான்ஸ்டபிள்களிடமும் பொதுவாகக் கேட்டார் சப்-இன்ஸ்பெக்டர்" அவனை எக்ஸ்-ரே எடுப்பதற்காக அழைத்துச் சென்றிருக்கிறார்களா?"

அப்போதுதான் இரண்டு கான்ஸ்டபிள்களும் திரும்பிக் கட்டில் காலியாக இருப்பதைப் பார்த்து, "அய்யோ! இங்கேதானே இருந்தான்!" என்று கோரஸாகப் பதறினார்கள்.

மாலைச் செய்தித்தாளின் மூன்றாம் பக்கத்தில் அகஸ்டினின் முன்னாள் புகைப்படத்துடன் செய்தி வெளியிட்டிருந்தார்கள்!

ஆயுள் கைதி சாமர்த்தியமான முறையில் தப்பியோட்டம்! படத்தில் காணப்படும் தப்பியோடிய கைதியைப் பற்றித் தகவல் தரவேண்டிய முகவரி...

## 2

அவள் உயரமாக இருந்தாள். சரேல் வளைவுகளுடன் இருந்தாள். இளமையின் கம்பீரமான ஆர்ப்பாட்டங்களுடனிருந்தாள். கடைசல் சிற்பமாய் இருந்தாள்.

தற்சமயம் அந்தக் கட்டிலில் படுத்திருந்தாள். மெத்தைக்கு மட்டும் துணி போர்த்தியிருந்தது. ஆனால் அவள் மூடப்பட்டிருந்தாள்- ரஞ்சித்தால்.



"ஏய்! ரஞ்சித், என்ன அவசரம்? அடுத்த விநாடி பூகம்பம் ஏற்பட்டு இந்த நகரத்தோடு சிதறிப் போய்விடப் போகிறோமா, என்ன? மெதுவாக!" அவன் மீசையைப் பிடித்திழுத்துச் சொன்னாள்.

"ச்சே! பேசாதே! எல்லா நேரங்களிலும்தான் பேசித் தீர்க்கிறோமே. இப்போதுமா?"

அவன் இடது கை அவளின் கழுத்துக்கடியில் சிக்கியிருக்க ஆஸ்பத்திரி வராந்தாவில் பினாயில் ஊற்றி குச்சித் துடைப்பத்தால் துடைப்பதுபோல வலது கை அவளின் உடம்பு முழுக்க சர்வ சுதந்திரமாக விரல் யாத்திரை மேற்கொண்டிருந்தது.

"ஏய்! ஸாரிப்பா. நீ திட்டினாலும் சரி என்னால் பேசாமல் இருக்க முடியவில்லை. ஒன்று கேட்டு விடுகிறேனே...."

"இந்த சப்ஜெக்ட் தவிர வேறு எதுவாக இருந்தாலும் அனுமதி இல்லை" என்று அவள் உடம்பைத் தொட்டுக் காட்டினான்.

"இந்த சப்ஜெக்ட்தான். உனக்கு.... அலுக்கவில்லை?"

"ஏன், உனக்கு அலுத்து விட்டதா?"

"இல்லை. ஆனால் உன்னளவுக்கு வெறி இல்லை. இப்படித்தான் பல் பதியும்படி கடிப்பார்களா?"

"உன் உதட்டை சும்மா விட்டதுத் தப்பு" வேறு பகுதியிலிருந்த தன் தலையை அவள் முகத்திற்குக் கொண்டுவந்து, கொக்கு மீன் கொத்துவது போல அவள் உதடுகளைக் கவ்வலாக முற்றுகையிட்ட பிறகு...

ரஞ்சித் முதுகு வியர்க்கத் துவங்கினான்.

எழுந்து. அணிந்து தண்ணீர் குடித்தான் கீழே கிடந்த நைட்டியைக் காலாலேயே எடுத்து அவளை நோக்கி வீசினான்.

"எனக்கும் ஒரு டம்ளர் தண்ணீர்" அவ நைட்டி கோபித்துக் கொள்ளுமே என்பதற்கா வெறுப்பாக அணியத் துவங்கினாள்.

கொடுத்து விட்டு சிகரெட் பற்ற வைத்தா ரஞ்சித். அவளுக்கும் நீட்ட, "பற்ற வைத்து கொடேன்" என்றுக் கூந்தலை பிரஷ் செய்ய துவங்கினாள்.

பற்ற வைத்ததை வாங்கி சுவராசியமாக புகைத்த அவள் என்கிற ஸ்வாதி, "என்ன ஆயிற்று ரஞ்சித்? ஒருவாரமாக எதிர்பார்த்து கொண்டிருக்கிறோம். ஏன் இன்னும் நமக்கு தகவலே இல்லை?" என்றாள்.

உதட்டைப் பிதுக்கி தலையசைத்தான் சிகரெட்டின் நெருப்பை என்னவோ வைர போலப் பார்த்தான்.

"தெரியவில்லை ஸ்வாதி. ஒருவேளை பொறுப்பு வேறு நபருக்குப் போய்விட்டதோ என்னவோ?"

"நம்பிக்கையாகச் சொன்னாயே ரஞ்சித்?"

"அப்படித்தான் சொல்லப்பட்டேன்."

"இருபத்தி ஐந்து லட்சங்கள்"

"ஒரு உயிருக்கு எவ்வளவு மதிப்பான விலை!"

"கொடுப்பவர்களுக்கு இது ஒரு தொகையே இல்லை ஸ்வாதி. பெரிய சட்டையில் ஒரு சின்ன பட்டன்! தட்ஸ் ஆல்."

"யாராம் அது?"



"இந்த ஆராய்ச்சி நமக்குத் தேவையே இல்லாதது"

"இருபத்தைந்தை என்ன செய்யலாம் ரஞ்சித்? உன்கையில் தூக்கிக் கொடுத்து விட்டார்களா என்ன?"

"வந்து விட்டதாகப் பேசேன்."

"வாட்டும் பரிசுச் சீட்டு சமாச்சாரமில்லை. உழைக்க வேண்டும். எத்தனை பெரிய ரிஸ்க்கை எதிர்கொள்ள வேண்டும்.

"பிரசவம் என்றால் வலிக்கும். ரிஸ்க் எடுப்பதால்தான் கால் கோடி"

ஒலித்த டெலிபோனை எடுத்துப் பேசி. "இருக்கிறார், ஒன் மினிட்" என்று அவனிடம் நீட்டினாள், "வந்துவிடப் போகிறது ரஞ்சித்."

"ஹலோ ரஞ்சித்" என்றான் வாங்கி.

"வொய்ட் ஹார்ஸ். ரூட் நம்பர் நைன்டீன்" அவ்வளவுதான் சொல்லப் பட்டது. எதிர்முனையில் வைக்கப்பட்டது.

ரஞ்சித் கழற்றி வைத்திருந்த வாட்ச்சில் பார்த்தான். 10.45 ஜன்னலுக்கு வெளியே இருட்டுக்கு வெள்ளை பூசிக்கொண்டிருந்தது பனி.

ரஞ்சித் பீரோ திறந்து வேறு உடை எடுத்து அணிந்தான். மற்றொரு கப்போர்டில் விதவிதமாக இருந்த விக்குகளில் ஒன்றை எடுத்து தலையில் பொருத்திக் கொண்டு அதே அளவு நரையோடிய மீசையைப் பொருத்திக் கொண்டு, கண்ணாடி அணிந்து கண்ணாடி முன் நின்றபோது சொந்த அடையாளங்களைத் தொலைத்திருந்தான்.

ஸ்வாதி ஒரு வட்ட மச்சத்தில் கம் தடவி அவன் தாடையருகில் ஒட்டி விட்டாள்.

"நம் காரிலா போகப் போகிறாய்?"

"சேச்சே. தெரு முனைக்குப் போய் டாக்ஸி பிடிப்பேன்"

கொட்டாவி விட்டாள், "ரொம்ப நேரமாகுமா திரும்ப?"

"அது அங்கேப் போனால்தான் தெரியும். தூங்கு நான் சாவி எடுத்துப் போகிறேன் உன்னை எழுப்பாமல் வந்து படுத்துக் கொள்கிறேன். நான் வரும்போது நீ இருக்கும்போஸைப் பொறுத்து செகண்ட் இன்னிங்ஸ் துவங்கினாலும் துவங்கலாம்."

"கிழவனுக்கு ஆசையைப் பார்!" கன்னத்தில் இடித்து அனுப்பி வைத்தாள்.

தன் வீட்டை விட்டு வெளியேறி மஃப்ளரைக் கழுத்தில் சுற்றிக் கொண்டு மெதுவாக நடக்கத் துவங்கினான் ரஞ்சித்.

## 3

ஹோட்டல் வொய்ட் ஹார்ஸ் ரேஸ் கோர்ஸ் அருகில் கம்பீரமாக கத்தன் உடலெங்கும் வெள்ளை மார்பிள்களைப் பதித்துக் கொண்டு நின்றது. புதியதாய் பார்ப்பவர்கள் அது ஹோட்டலா இல்லை பழங்கால அரண்மனையா என்றுச் சந்தேகப்படுவார்கள்.

அந்த வகையில் ஒரு பழைமை டச்சுடன். ஆனால் இன்றைய தேதியின் அத்தனை விஞ்ஞானச் சௌகரியங்களையும் இணைத்துக் கொண்டு கட்டப்பட்டிருந்த அந்த ஹோட்டல் இது இரவென்று ஒப்புக் கொள்ளத் தயாரில்லாமல் மின்சார விளக்குகளைப் போர்க் கொடியாக



உயர்த்தி வெளிச்ச வெளிச்சமாய் ஜ்வலித்துக் கொண்டிருந்தது.

டாக்ஸியை விட்டு இறங்கின கிழவன் ரஞ்சித் தன் நடையிலும் தளர்வைச் சேர்த்துக் கொண்டு பிரதான கண்ணாடிக் கதவுகளை நோக்கி நடந்தான்.

வெள்ளைப் பட்டுத் துணியால் டர்பன் வைத்து அதில் வாண மயமாகச் சிறகுகளைச் சொருகி வைத்திருந்த கதவுக்காரன் எல்லோருக்கும் போல இவனுக்கும் பாதி உடம்பை முன்புறம் மடித்து வரவேற்றுக் கதவைக் திறந்துவிட்டான்.

கார்ப்பெட்டில் நடப்பது வாட்டர் பெட்டின் மேல் நடப்பது போல அத்தனை மென்மையாக இருந்தது. உயர்ந்த ஜாதி மக்கள் இறைந்த குரலில் பேசி நடந்தார்கள். அங்கங்கே திவான் ஸோபாக்களில் உட்கார்ந்து எதையோ படித்துக் கொண்டிருந்தார்கள். வெளிப்படையாகத் தெரிகின்ற இரண்டு லிஃப்ட்டுகள் ஓசையில்லாமல் ஏறி, இறங்கிக் கொண்டிருந்தன.

புக் ஷாப், டிராவல்ஸ் பிரான்ச் கடந்து எட்டு வடிவத்திலிருந்து நீச்சல் குளத்தைச் சுற்றிக் கொண்டு சூட்ஸ் இருந்த பகுதிக்கு நடந்தான் ரஞ்சித்.

சூட் நம்பர் 19 ஒரு மினி பங்களா போல வாசலில் செயற்கை நீருற்று ரோஜாத் தோட்டம் எல்லாம் வைத்திருந்தது. வந்தான் கதவில் 19 என்று பித்தளை எண்கள் பளபளப்பாக இருந்தன. அருகில் உள்ளங்கையகலத்திற்கு அழைப்பு மணிப் பித்தான் இருந்தது.

அதைத் தொட்டதும் உள்ளே ஒரு குயில் விக்கலுடன் கூவியது.

"யெஸ்!"

குரல் வந்ததும் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே வந்தான் ரஞ்சித் மறுபடி கணுக்கால் வரை மூழ்கடிக்கும் கார்ப்பெட் நரம்பைக் குசலம் விசாரிக்கும் குளிரூட்டப்பட்டக் காற்று.

படுக்கையில் ஒருக்கழித்தபடி ஒரு பர்சனல் கம்ப்யூட்டரில் கீ போர்டில் தட்டி ஸ்க்ரீனில் வரிவரியாகப் படித்துக் கொண்டிருந்த சிகப்பு உடம்பு சார்லஸ் தன் உடம்பில் ஒரே ஒரு ஷார்ட்ஸ் மட்டும் அணிந்திருந்தான். ஆட்டுக்கு மாதிரி தாடி வைத்திருந்தான். பூனைக் கண்கள். சிவந்த ரோமங்களுடன் தலை. புருவங்களில் முடி தேட வேண்டும்.

அவனைப் பார்த்ததுமே இவன் இந்தியன் இல்லை என்று யாருக்கும் தெரியும்.

"வா ரஞ்சித் உட்கார். எப்படி இருக்கிறாய்?"

நிகோடின் வடிகட்டும் நீளமான ஃபில்டரில் பொருத்தின தன் சிகரெட்டை எடுத்துக் கொண்ட சார்லஸ் கண்ணாடி டப்பாயில் இருந்த சிகரெட் பாக்கெட்டைக் காட்டினான்.

ரஞ்சித் அமர்ந்து எடுத்துக் கொண்டு, "நான்கு தினங்களுக்காக உங்கள் அழைப்புக் காகக் காத்திருந்தோம்" என்றான்.

"...தோம் என்றால்?"

"நானும், ஸ்வாதியும்"

ஸ்வாதியை நீ கல்யாணம்?

"இல்லை. அது ஒன்றுதான் பாக்கி."

"செய்து கொள்ளும் அபிப்பராயம் இருக் கிறதா, இல்லையா?"

"அது உண்டு அவசியம்தான் யோசிக்க



வேண்டும். இப்போதே நாங்கள் ஒரே வீட்டில் கணவன் - மனைவியாகத்தான் வாழ்ந்து வருகிறோம்."

"அது உன் சொந்த விஷயம் ஸ்வாதி நம்பகமானவள்தானே?"

"உங்களுக்கு ரகசியங்கள் காப்பாற்றப்படுமா என்கிற அரிச்சவடியான சந்தேகங்கள் தேவை யில்லை சார்லஸ். அதுவும் வெற்றிகரமான ஐந்து பிராஜெக்ட்டுகளுக்குப் பிறகு"

சார்லஸ், புன்னகைத்து, "ரஞ்சித், இதுவரை நீ நடத்திய ஐந்து கொலைகளும் அதிகாரிகள்! இந்தத் தடவை நபர் பெரியவர்! பெரிய அந்தஸ்து!"

"இருபத்தி ஐந்து லட்சம் என்று தொகை சொல்லப்பட்டபோதே நான் ஓரளவு யூகித்தேன் சார்லஸ்."

சார்லஸ் எழுந்து மெதுவாக நடந்தான். ஒரு வீடியோ கேஸட்டைத் தன் சூட்கேசிலிருந்து எடுத்தான். டெக்கில் அதைப் போட்டு, டி.வி.யை ஆன் செய்து வீடியோ சேனலுக்கு மாற்றி, ரிமோட் கண்ட்ரோல் பீசை எடுத்துக் கொண்டு கட்டி லுக்கு வந்தமர்ந்தான்.

"ரஞ்சித், நபர் யாரென்று ஏதாவது யூகம் செய்து வைத்திருக்கிறாயா?"

"இல்லை. நிச்சயமாக இந்தத் தடவை அதிகாரிகள் குழுவில் இல்லை!"

"சரி, யார்?"

"தெரியவில்லையே. நீங்களேச் சொல்லி விடுங்கள்."

ரிமோட் கண்ட்ரோலால் வீடியோவை இயக்கியதும், டி.வி.திரையில் குறுக்குக் கோடு

களுக்குப் பின் ஒரு பொதுக் கூட்டத்தில் குளோஸ்-அப்பில் பேசிக் கொண்டிருந்த நபரைப் பார்த்ததும் ரஞ்சித்தின் வலது கை தன்னை யறியாமல் தன் நெஞ்சிற்குச் சென்றது.

"மை காட்! மத்திய அமைச்சர் ஆச்சார்ய மல்ஹோத்ரா!" என்றான்.

"ஆமாம் ரஞ்சித். இந்தத் தடவை உன் துப்பாக்கி குறி வைக்க வேண்டியது இவரைத் தான். இந்தக் கேஸட் முழுக்க ஆச்சார்ய மல்ஹோத்ரா கலந்து கொண்ட கூட்டங்களில், தனிப்பட்ட அவரது இல்ல விசேஷங்களில் எடுக்கப் பட்ட வீடியோக்களின் தொகுப்பு இருக்கிறது. அவரது நடை, உடை, மேனரிசங்கள் இவற்றை அறிய உனக்கு உதவும்."

கேஸட்டை நிறுத்திய சார்லஸ் தன் தலையணைக்கடியில் இருந்து ஒரு பெரிய கவர் எடுத்துக் கொடுத்தான்.

"இதில் அவருக்கு வழங்கப்பட்டு வரும் பாதுகாப்பு ஏற்பாடுகள், அவரது தினசரி அலு வல்கள், இன்னும் ஒரு மாதத்திற்கு அவர் ஒப்புக்கொண்டுள்ள பொது நிகழ்ச்சிகளின் விபரங்கள், அவரது குடும்ப விவரங்கள் காரியதரிசிகள் பற்றி விபரங்கள் தொலைபேசி எண்கள் என்று சகலமும் உள்ளன. இந்த ஸ்டேட் வொர்க்கிற்கு மட்டும் இருபது நாட்கள் தேவைப்பட்டன. இந்தாரஞ்சித்."

கொஞ்சம் தயங்கிவிட்டு ரஞ்சித் அந்தக் கவரை வாங்கிக் கொண்டு சிந்தனை வயப் பட்டான்.

என்ன ரஞ்சித், சிந்தனையில் ஆழ்ந்து விட்டாய்?"



"இதுவரை நான் செய்த காரியங்களில் எதிரிகளுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகளே கிடை யாது. மத்திய மந்திரியின் விஷயம் அப்படி யில்லை. இது ஒன்றும் அத்தனைச் சுலபமாக அமையப் போகிற விஷயமில்லை சார்லஸ்"

"தெரியும். அதனால்தான் ரஞ்சித்தை அழைத்தேன் அதனால்தான் தொகைவெறும் அஞ்சிலிருந்து இருபத்தி அஞ்சாக உயர்த்தப் பட்டது தயக்கமாக இருக்கிறதா ரஞ்சித்?"

"இல்லை ரிஸ்க் அதிகம். ரொம்ப ரொம்ப யோசித்துத் திட்டம் அமைக்க வேண்டும்."

"யோசி! உன்னால் முடியும். ஐந்து ப்ராஜெக்ட்டிலும் ஒருத் துணுக்களவிற்குகூட எந்தத் தடயத்தையும் விட்டு வைக்காமல், மாட்டிக் கொள்ளாமல் சாமத்தியமாகச் செய்தவன் நீ. ஒவ்வொன்றுமே அற்புதமாக வடிவமைக்கப் பட்டுச் செயல்படுத்தப்பட்டத் திட்டங்கள்!"

"பாராட்டு இருக்கட்டும். சார்லஸ், இதில் ரிஸ்க் அதிகம் என்பதால் நான் இன்னும் சற்று அதிகம் எதிர்பார்க்கலாமா? 'முடிந்தால் வெற்றி. முடியவில் லையென்றால் விலையாக என் உயிரையேத் தரவேண்டும்' என்கிற அடிப்படை யில்தான் திட்டம் அமைத்தாக வேண்டும்."

சார்லஸ் புன்னகைத்துக் கொண்டு, "சரி கேள்! என்ன எதிர்பார்க்கிறாய்?"

"நாற்பது லட்சங்கள்!"

"ரொம்பதான் ஆசைப்படுகிறாய் நீ. அத்தனைப் பணத்தை வைத்துக் கொண்டு என்ன செய்வாய் ரஞ்சித்?"

"எரித்துக் குளிர் காய்வேன் அது நான் பார்த்துக் கொள்கிறேன் சார்லஸ். அது ஒன்றும்

முடியாத தொகை இல்லை என்பது என் அபிப்ராயம்."

"தப்பில்லாமல் செய்துவிடுவாயா?"

"எந்த தடவையாவது தப்பு செய்திருக் கிறேனா?"

"இல்லைதான் ஒக்கே ஒப்புக் கொள்கிறேன் ரஞ்சித் அட்வான்சாக அஞ்சு லட்சம் தருகிறேன் மீதியை முடித்ததும் பெற்றுக் கொள்."

சூட்கேசில் இருந்து ஐநூறு ரூபாய் கட்டுக்கள் பத்து எடுத்து அவன் முன்னால் வைத்தான் சார்லஸ். ரஞ்சித் அருகிலிருந்த செய்தித்தாளின் உள்ஷீட் எடுத்து அதில் கட்டுக்களை வைத்து பொட்டலமாகக் கட்டிக் கொண்டான்.

"இதையெல்லாம் பார். வேறு ஏதாவது தகவல் வேண்டுமென்றாலும் என்னைக் கேள். என்னால் தாமுடியும் ரஞ்சித்."

"சரி."

"அப்புறம் ஒரு விஷயம்."

"என்ன?"

"மார்ச் மாதம் முதல் வாரத்தில் ஆச்சார்ய மல்ஹோத்ரா ஜெர்மனிக்கு ஒரு கூட்டு ஒப்பந்தந்தில் கையெழுத்திடப் புறப்படுகிறார். அந்தப் பயணம் நிகழக் கூடாது உன் காரியத்தை அதற்கு முன்னதாக முடித்துவிட வேண்டும்."

ரஞ்சித் தன் வாட்சில் தேதி பார்த்து, "அதற்கு இன்னும் ஒரு மாதமிருக்கிறதே. எனக்கு அவ்வளவு நாட்கள் தேவைப்படாது சார்லஸ். நான் புறப்படவா?" எழுந்து கொண்டான்.

"மறுபடி நாம் எப்போது சந்திக்கிறோம்?"



"எனக்கு ஒரு வாரமாவது தேவைப்படும் பலவிதமாக யோசனை செய்து ஒரு இறுதித் திட்டத்திற்கு வருவதற்கு நான் திட்டத்தை முற்றிலுமாக வடிவமைத்ததும் தொடர்பு கொண்டு பேசிவிட்டு நேரில் சந்திக்கிறேன். சார்லஸ், தனிமை போரடிக்கவில்லை?"

"அடிக்கிறதுதான்" என்று கண்ணடித்தான் சார்லஸ்.

"நாளைக்கு ஸ்வாதியை அனுப்பி வைக் கிறேன்" என்று அவன் கன்னத்தில் செல்லமாகத் தட்டுவிட்டு பணக்கட்டுடன் வீடியோ கேஸட், மற்றும் விபரங்களடங்கிய கவருடன் புறப் பட்டான் ரஞ்சித்.

சூட்டை விட்டு வெளியேறியதுமே கிழ வனாகத் தளர்ந்து நடந்தான்.

## 4

பஹார்கன்ச்சில் இருந்தது அந்த ரூபா மருத்துவமனை. தனியாருடையது. நான்கு மாடிக் கட்டிடம் மருத்துவத் துறையில் உள்ள அத்தனை வசதிகளும் கொண்ட ஹாஸ்பிடல். எல்லாத் துறைகளிலும் சிறப்பான மருத்துவர்கள் ரூபாவுக்கு வந்து செல்கிறார்கள். நோயாளிகளும் கார்களில்தான் வருகிறார் டாக்டர்களும் கார்களில் தான். பார்க்க வருபவர்களும் கார்களில்தான் ஃபினாயில் வாசனைகள் வீசாத பணக்கார நட்சத்திர மருத்துவமனை.

அந்த சர்தார்ஜி ஹாஸ்பிடலுக்கு ரொம்ப முன்னதாகவே இறங்கிக் கொண்டு டாக்ஸியை அனுப்பி வைத்தான் நடந்தான். கையில் பழக்கூடை.

மருத்துவமனையின் பிரதான வாசலுக்கு வந்து, தயக்கம் காட்டாமல் உள்ளே வந்தான். ரிசப்ஷன் பகுதியில் போன் பேசிக் கொண்டிருந்த பெண்மணி ரிசீவரை வைக்கும்வரைக் காத்திருந்து, "எக்ஸ்க்யூஸ் மி, பேஷண்ட் பெயர் மிஸ். விக்டோரியா இங்கே அட்மிட் ஆகி ஒரு வாரமாகிறது. எந்த வார்டு, எந்த ரூம் நம்பர் என்றுச் சொல்ல முடியுமா?"

"ஒரு நிமிடம்" என்ற அவள் தன்னருகில் இருந்த கம்ப்யூட்டரின் கீ போர்டில் தன் விரல்களைக் குதிக்க வைத்து, திரையில் பார்த்த, "யூராலஜி டிபார்ட்மெண்ட். மூன்றாவது மாடியில் இடதுபுறம் - ஸ்பெஷல் வார்டு - அறை எண் 319 ஒரு நிமிடம் பார்வையாளர்கள் நேரம் ஒன்பது மணியோடு முடிந்துவிடும்" என்றாள்.

சர்தார்ஜி சுவரில் அவள் காட்டின வால் க்ளாக்கில் மணி பார்த்து, "இன்னும் பத்து நிமிடங்கள் உள்ளதே. எனக்கு அது போதும் நன்றி" என்று நடந்தான்.

""நீங்கள் லிஃப்ட்டை உபயோகிக்கலாம் என்று அவள் சொன்னதை முதுகில் வாங்கிக் கொண்டு லிஃப்ட் திசையில் நகர்ந்தான்.

அடுத்த நிமிடத்திற்குள் அவன் ஸ்பெஷல் அறை 319ன் முன்பாக நின்றிருந்தான். விரல் மடக்கி மென்மையாகத் தட்டினான்.

கதவைத் திறந்த தலை நரைத்தப் பெரியவர் அவனைப் புரியாமல் கண்களைச் சுருக்கிப் பார்த்தார்.

அவன் எதுவும் பேசாமல் அவசரமாக உள்ளே வந்து கதவை மூடித்தாழிட்டான். அதே அவசரத்தில் தன் டர்பனையும், தாடியையும் எடுத்தான். பெரியவர் வாய் பிளந்தார்!



"அ...அகஸ்டின், நீயா?"

"ஆமாம் மாமா. விக்டோரியா எப்படி இருக்கிறாள்? முதலில் அதைச் சொல்லுங்கள்"

அகஸ்டின் விசாலமான அந்த அறையில் கட்டிலில் படுத்து உறங்கிக் கொண்டிருந்த விக்டோரியாவைப் பார்த்தான். பல நாட்களாக எடுக்காமல் சுருக்குப் பைக்குள் சிறை வைத்திருந்த வெற்றிலையைப் போல அவள் முற்றிலும் வாடி, வதங்கிப் போயிருந்தாள்.

கன்னங்கள் ஒட்டிப் போய், கண்கள் குழிகளுக்குள் விழுந்து தலைமுடி நிறைய உதிர்ந்து உடம்பு குச்சியாக இளைத்து...அய்யோ இவள் என் விக்டோரியாதானா?

"மாமா, என்ன நிலையில் இருக்கிறாள்?"

"அகஸ்டின் உனக்கு நான் கடிதத்தில் எழுதியிருந்த அதே நிலைமை தான். முதலில் ஒரு கிட்னி வேலை செய்வதை நிறுத்தியது பிறகு இரண்டு கிட்னியுமே வேலைசெய்யவில்லை அடிக்கடி இயந்திரத்தில் ரத்தத்தை சுத்தப்படுத்தி மறுபடி உடலுக்குள் செலுத்துகிறார்கள். இயங்காத கிட்னி ஒன்றில் இன்ஃபெக்ஷன் வேறு இருக்கிறதாம். இந்த டயாலிசிஸ் முறையை தொடர்ந்து கொண்டிருப்பதில் அர்த்தமில்லை என்று டாக்டர்கள் சொல்லி விட்டார்கள்."

"அய்யோ! விக்டோரியா இதிலிருந்து பிழைக்க மாட்டாளா? முன்போல எழுந்து நடமாட மாட்டாளா?"

"பிழைப்பாள் - மாற்றுச் சிறுநீரகம் பொருத்தினால். இன்னும் ஒரு வாரத்திற்குள் இந்த ஆபரேஷன் நடந்தாக வேண்டுமாம்"

ன்னிடம் இருந்த நகை, பணம் எல்லாவற்றையும் வைத்து இதுவரை வைத்தியம் பார்த்து விட்டேன். மேற்கொண்டு என்னிடம் எதுவும் இல்லாமல் கையைப் பிசைந்து கொண்டு நிற்கிறேன்."

"மாற்று சிறுநீரகம் பொருத்த எவ்வளவு செலவாகுமாம் மாமா?"

"இந்த ஆஸ்பத்திரியில் மொத்தமாக மூன்று லட்சம் கொடுத்து விட்டால் போதுமாம் சிறுநீரகம் டொனேட் செய்பவரை ஏற்பாடு செய்வதிலிருந்து அத்தனைச் செலவையும் இவர்களேப் பார்த்துக் கொள்வார்களாம் இன்னும் ஒரு வாரத்திற்குள் பணத்தை ஏற்பாடு செய்து ஆபரேஷன் செய்து கொள்ளுங்கள். அல்லது டிஸ்சார்ஸ் செய்து கொண்டு அரசாங்க மருத்துவ மனைக்குப் போங்கள் என்றுச் சொல்லி விட்டார் கள் நான் எனக்கு அறிமும் உள்ள அத்தனைப் பேரையும் பார்த்துவிட்டேன் அகஸ்டின் நூறு இருநூறு என்றால் கொடுக்கத் தயாராக இருக் கிறார்கள் மூன்று லட்சத்தை உதவியாகவோ இல்லை கடனாகவோத் தூக்கிக் கொடுக்க யாருமில்லை"

"ஜீசஸ்!" என்றான் அகஸ்டின் கண்களை மூடி, "என் விக்டோரியா செத்துப் போகக் கூடாது மாமா. அவள் பிழைக்க வேண்டும். பிழைக்க வேண்டும்" புலம்பியபடி ஸ்டூலில் அமர்ந்தான்.

அவன் தோளில் கைவைத்த மாமா ரொஸாரியோ, "அது சரி, நீ எப்படி ஜெயிலிருந்து வந்தாய்? அனுமதி பெற்று வந்தாயா?" என்றார்.

"அனுமதி பெற்ற வருபவன் மாறு வேடத்திலா வருவான்? தப்பித்து வந்திருக்கிறேன் மாமா."



"அய்யோ!"

"உங்கள் கடிதத்தைப் படித்ததும் எனக்கு உடனே விக்டோரியாவைப் பார்க்க வேண்டு போலிருந்தது. அவள் மருத்துவச் செலவுக்கு ஏதாவது ஒருவகையில் ஏற்பாடு செய் வேண்டும் என்று மனம் துடித்து என்ன ஆனாலு சரியென்று வயிற்று வலிபோல துடித்து அரசாங் ஆஸ்பத்திரியில் சேர்க்கச் செய்து. அங்கிருந் சாமர்த்தியமாகத் தப்பித்துவிட்டேன். செய்தி தாள்களில் என் புகைப்படத்துடன் செய் வெளியாகியிருக்கிறது. அதனால் தான் இந் சர்தார்ஜி வேடம் இப்போது விக்டோரிய தூங்குகிறாளா?"

"ஆமாம் மாலையில்தான் டயாலிசி செய்தார்கள். எழுப்பட்டுமா?"

"நான் எழுப்பிக் கொள்கிறேன் மாம "ஸ்டூலை அவள் தலைக்கருகில் இழுத்த போட்டுக் கொண்டான் அகஸ்டின்.

"கீழே மருந்துக் கடை வரைக்கும் போ வந்துவிடுகிறேன்" மாமா அறையைவிட் வெளியேறியதும் மறுபடி தாழிட்டுக் கொண் வந்தமர்ந்து வேதனை படிந்த விக்டோரியாவி முகத்தையே சில விநாடிகள் அமைதியாக பார்த்துக் கொண்டிருந்தான் அகஸ்டின்.

செயின்ட் ஜேம்ஸ் சர்ச்சில் விக்டோரிய வும், அகஸ்டினும் அருகருகில் பெஞ்சி மண்டியிட்டு தூரத்து மேடையில் பாதிரியா படித்த பிரேயர் வசனங்களை நூறு ஜன களுடன் இணைந்து சொல்லிக் கொண்டிரு தார்கள்.

அந்த பெஞ்ச் பலகையில் யாரோ 'I Lo Jesus' என்றுக் கீறி வைத்திருந்தார்கள். அகஸ்

ளின் உதடுகள் பைபிளின் வாசகங்களை இயல்பாகச் சொல்லிக் கொண்டிருக்க, கை மெதுவாகத் தன் ஜீன்ஸ் பேண்ட்டின் பாக்கெட்டிலிருந்து மோட்டார் பைக்கின் சாவியை எடுத்தது. அந்த வாசகத்திற்குப் பிறகு சில எழுத்துக்களைத் தொடர்ந்து அந்த சாவியால் கீறியது.

எழுதி முடித்ததும் முழங்கையால் லேசாக விக்டோரியாவை இடித்து தான் எழுதியிருப்பதைப் பார்க்கச் சொல்லி ஜாடை செய்தான்.

"I Love Jesus Next To Victoria" என்ற வாசகமாக அவன் உருவாக்கியிருந்ததைப் பார்த்துவிட்டு அவள் செல்லமாக உதடுகளில் பழிப்பு காட்டிவிட்டு, பிரேயரை ஒழுங்காகச் செய்யச் சொல்லி பாவனையாகக் கண்டித்தாள்.

பிரேயர் முடிந்து கலையும் போது உம்மென்று வந்த விக்டோரியா சர்ச்சுக்கு வெளியே மரத்தடியில் நிறுத்தியிருந்த பைக்கிற்கு வந்ததும், "திமிர்தானே உனக்கு! என்ன எழுதியிருந்தாய் படவா? அதற்கு என்ன அர்த்தம்?" என்றாள்.

"நான் விக்டோரியாவிற்கு அப்புறம்தான் ஏசுவை நேசிக்கிறேன் என்று அர்த்தம். நீ கோபப்பட அதில் என்ன இருக்கிறது?"

"அகஸ்டின்; எனக்கு அர்த்தம் புரிவதால் தான் கோபிக்கிறேன். எனக்கு மிகைப்படுத்துவது பிடிக்காத விஷயம் அகஸ்டின். சினிமாவில் கூட ஒரு ஹீரோ கண்ணே உனக்கு ஆகாயத்து நட்சத்திரங்களைப் பறித்து வந்து நெக்லஸாக அணிவிக்கட்டுமா?" என்றுக் கேட்டால் பற்றிக் கொண்டு வரும். அந்த மாதிரிதான் நீயும் பேத்துகிறாய்.



ஜீசஸுக்கும் மேல் யாரையும் நேசிக்க முடியாது அகஸ்டின்"

"நான் நேசிக்கிறேன் விக்டோரியா. சத்தியமாக எனக்குச் சின்ன வயதிலிருந்தே ஜீசஸ் மேல் அதிகமான ஈடுபாடு இல்லை. அவ்வப்போது சம்பிரதாயமாக கிராஸ் போட்டுக் கொள்வேன். அப்பாவின் வற்புறுத்தலுக்காகத் தான் ஸண்டே மாஸுக்குப் போவேன். ஆனால் இப்போதெல்லாம் வாரம் தவறாமல் சர்ச்சுக்கு வருவதே உனக்காகத்தான் என்றால் நீ நம்புவாயா? பிரேயரில் என் உதடுகள் பைபிள் வாசகங்களை உச்சரித்தாலும் இதயம் மட்டும் விக்டோரியா, . விக்டோரியா என்றுதான் உச்சரித்துக் கொண்டிருக்கும். நீ கண்மூடி பிரார்த்தனையில் இருப்பதை ரகசியமாக ரசிப்பேன். உன் சின்ன உதடுகள் வார்த்தைகளுக்காக நளினமாக நெளிவதைதான் பார்த்துக் கொண்டிருப்பேன். இப்போது சொல்! நான் ஜீசஸிற்கும் மேலாக உன்னை நேசிக்கிறேன் என்று எழுதினதில் என்ன தப்பு?"

அவனை ஆச்சரியத்துடன் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்த விக்டோரியாவின் கண்கள் கலங்கின.

"அகஸ்டின், நான் ரொம்ப லக்கி!" என்றாள் குரல் தடுமாற.

"இல்லை விக், நான்தான் லக்கி - இப்படி லட்டு மாதிரி எனக்கு ஒரு மாமன் மகளைத் தந்த ஜீசஸிற்கு நன்றி சொல்ல வேண்டும் உட்கார்"

பைக்கில் அமர்ந்து ஸ்டார்ட் செய்தான், பின்னால் அமர்ந்து கொண்டு அவன் இடுப்பை உரிமையோடு கட்டிக் கொண்டு அவன் முதுகில்

தன் தலையைச் சாய்த்துக் கொண்டாள் விக்டோரியா பைக் ஓடத் துவங்கியது.

"உன்னை ஒன்றுக் கேட்கட்டுமா அகஸ்டின்?"

"கேள்"

"நான் என்ன பிரமாதமான அழகியா?"

"ஏன் இந்தக் கேள்வி?"

"நீ ஏன் இவ்வளவு தூரம் உருகுகிறாய் என்று காரணம் தேடுகிறேன்"

"அசட்டுத்தனமாகப் பேசாதே விக்டோரியா காதலுக்கும் காமச் சலனத்திற்கும் வித்தியாசம் உண்டு கவர்ச்சியமான ரொம்ப அழகான இளம் பெண்ணைப் பார்த்ததும் ஒரு இளைஞன் மனசில் தோன்றுவது படபடப்பான ஒரு காமச் சலனம்தான் அது காதல் இல்லை! காதல் ஏற்படுவதற்கு அழகு ஒன்றுதான் அடிப்படை என்றால் நான் மட்டும் அழகானவனா? என்னை நீ ஏன் நேசிக்கிறாய்? சொல்லேன். என் நீளமான மூக்கைப் பற்றி நீயே ஆயிரம் தடவை கிண்டல் செய்திருக்கிறாயா, இல்லையா?"

"நான் அப்புறம் சொல்கிறேன். நீ முதலில் சொல்."

"என்ன சொல்ல வேண்டும்?"

"மாமன் மகளாக அமைந்து விட்டதால்தான் என்னை உனக்குப் பிடித்திருக்கிறதா?"

"உளறாதே! எனக்கு ஆறு மாமாக்கள் எல்லோருக்குமாகச் சேர்த்து மொத்தம் பதினோறு மாமன் மகள்கள்! அத்தனை பேரையும் இந்த மாதிரி பைக்கில் உட்கார வைத்துச் சுற்று கிறேனா?"



"சரி சரியான காரணத்தைத்தான் சொல்லேன். பதினோறு பேரில் ஏன் நான் மட்டும் உனக்குக் காதலியாகத் தெரிந்தேன்?"

"உன் குணங்களில் அழகு! பதுக்கி வைக்கத் தெரியாமல் நீ அன்பை அவ்வப்போது வெளிப்படுத்தும் நளினம்! உன் மௌனமான கண்களால் பேசிய லட்சம் வார்த்தைகளின் அர்த்தங்கள்! இன்னும் சில நுணுக்கமான உணர்வுகளைச் சொல்லாக்குவது சிரமம் விக்டோரியா."

"எனக்காக எதுவும் செய்வாயா அகஸ்டின்?"

"நிச்சயமாக நீயே சொன்னதுபோல வானத்து நட்சத்திரங்களைப் பறிக்கும் கற்பனைக் கோமாளித்தனங்களை விட்டு நடைமுறையில் என்னால் சாத்தியப்படும் அத்தனையும் செய்வேன்."

"உதாரணமாக நான் ஒரு ஆளைக் கொலை செய்யச் சொன்னால்கூட செய்வாயா?"

"காரணமின்றி அப்படிச் சொல்ல நீ பைத்தியம் இல்லை. நீயே அப்படிச் சொன்னால் அதில் நியாயம் இருக்கும் என்று நம்பி நிச்சயமாகச் செய்வேன் விக்டோரியா இன்னொன்று சொல்வேன். நீ மிகை என்றுச் சொல்வாயோ என்று யோசிக்கிறேன்."

"பரவாயில்லை, சொல்!"

"நடைமுறையில் என்னால் அதிகபட்சமாகச் செய்யக் கூடிய செயல் என்ன தெரியுமா விக்டோரியா? உனக்காக அவசியப்பட்டால் என் உயிரையே விடுவது! அதற்கும் தயாராக இருக்கிறேன்."

"ச்சீ! என்னப் பேச்சு இது? இன்னொ
தடவை இப்படியெல்லாம் சொல்லாதே! என
அழுகை வரும் அகஸ்டின்" என்றவள் அவ
முதுகில் பொய்க் கோபத்துடன் குத்த, பை
கொஞ்சம் தடுமாறி திமிர்ந்தது.

பொங்கின அழுகையைக் கட்டுப்படுத்தி
கொண்ட அகஸ்டின் மெதுவாகக் குனிந்
விக்டோரியாவின் நெற்றியில் மென்மையா
முத்தமிட்டான். அவளது இரண்டு கன்ன
களிலும் மெதுவாகத் தட்டி, "விக்டோரியா
என்றான்.

மெல்ல தன் இமைகளைத் திறந்
விக்டோரியா ஆரம்ப விநாடிகளில் புரியாம
குழப்பமுற்று பிறகு புரிந்து கொண்டது
உற்சாகம் பொங்க, "அகஸ்டின்! நீ!நீதானா?
என்று எழுந்து அவன் கழுத்தைக் கட்டி
கொண்டாள். கண்களில் கண்ணீர் வழிந்தோட
அவனை அணைத்துக் கொண்டு, விலக்கி
"ஆமாம், நீ எப்படி வந்தாய்?" என்றாள்.

"விக்டோரியா, மாமா உன் உடல்நிலை
பற்றி தபால் எழுதியிருந்தார். படித்தது
உன்னைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை
அதனால் சாமர்த்தியமாக தப்பித்து வந்திரு
கிறேன்."

"அய்யோ! என்ன அகஸ்டின் இது! சட்டப்படி
இது தப்பு உனக்கு இன்னும் தண்டனைக்
காலத்தை அதிகரித்து விடுவார்கள்."

"அதான் பார்க்கிறாயே" வெறுமையாகப்
புன்னகைத்தாள்.

"ஜீசஸ், ஜீசஸ் என்று கிடந்து உருகுவாயே,
பார் உன் வாழ்க்கையில் எத்தனை விதங்கள்



உண்டோ, அத்தனை விதங்களிலும் தொல்லை
ளைத் தந்து விளையாடுகிறார், பார்!"

"இல்லை அகஸ்டின். அப்படியில்லை அவருக்கு என் மேல் ரொம்பப் பிரியம் என்னைத் தன்னருகில் வைத்துக் கொள்ள ஆசைப்பட்டு அழைத்துக் கொண்டிருக்கிறார்."

"அப்படியெல்லாம் சொல்லாதே விக்டோரியா" அவள் வாயை அவசரமாகப் பொத்தினான். "நீ பிழைக்கத்தான் போகிறாய். உன்னைச் சாகவிட மாட்டேன்."

விரக்தியாகச் சிரித்தாள், "உனக்கு என் உடல்நிலையின் இன்றைய நிலை தெரியாது அகஸ்டின்."

"தெரியும் நான் வந்து நேரமாகிவிட்டது. மாமா எல்லாம் சொன்னார். இன்னும் ஒரு வாரத்திற்குள் உனக்கு மாற்றுச் சிறுநீரகம் பொருத்தப்பட வேண்டும். அதற்கு மூன்று லட்சம் தேவைப்படுகிறது. இதுதானே இன்றைய நிலை? விக்டோரியா, நீ தைரியமாக இரு! எப்படியாவது சில தினங்களில் நான் மூன்று லட்சம் பணத்தோடு வருவேன்."

"உன் கற்பனை ஆறுதல் எனக்குச் சுகமாக இருக்கிறது என்று இப்போது நான் பொய் சொல்ல வேண்டுமா அகஸ்டின்?"

"என் மேல் உனக்கு நம்பிக்கை இல்லையா விக்டோரியா?"

"அப்படி இல்லை. நீயோ ஜெயிலில் இருந்து தப்பி வந்திருக்கிறாய் உன்னைக் கட்டாயம் போலீஸ் தேடிக்கொண்டிருக்கும். இந்தச் சூழ்நிலையில் மூன்று லட்சத்தை எப்படி ஏற்பாடு செய்வாய்? அதுவும் சில தினங்களில்? சின்ன தொகையா அது?"

"எப்படி என்று எனக்குத் தெரியவில்ல ஆனால் எப்படியும் நான் புரட்டித் தீருவேன். உயிரேப் போனாலும் சரி, மூன்று லட் பணத்தைக் கொண்டு வந்து கொடுத்துவி அப்புறம்தான் நான் போலீசில் சரணடை நான் புறப்படுகிறேன் விக்டோரியா தைரியம இரு நம்பிக்கையாக இரு!"

எழுந்து கொண்ட அவன் கையைப் ப இழுத்து தன் உலர்ந்த உதடுகளால் மென் யாக முத்தமிட்டாள் விக்டோரியா அவ தலையை ஆதரவாகத் தடவிக் கொடுத்துவிட் புறங்கையால் தன் விழிகளைத் துடைத் கொண்டான்.

சர்தார்ஜி வேடத்திற்கான தாடியை பொருத்திக் கொண்டு தலையில் டர்ப வைத்துக் கொண்டு புறப்பட்ட அகஸ்டின் நட லிஃப்டில் கீழே இறங்கி வெளியேறியதும்....

காத்திருந்த அந்த போலீஸ் இன்ஸ்பெக் அதே லிஃப்டில் நுழைந்து மேலேச் சென்றார்.

## 5

ரஞ்சித் காலியான கண்ணாடிக் கோப் யில் மறுபடி நிரப்பி ஐஸ் கட்டிகளை மிதக் விட்டுக் கொண்டான் தன் மடியில் வைத்திருந் குறிப்பு நோட்டை மறுபடி பார்த்துக் கொ டான்.

சற்றுத் தள்ளி ஸ்வாதி டி.வி.யில் வீடியோ கேம்ஸ் சாதனத்தை இணைத்துக் கொண் திரையில் விமானம் ஓட்டிக் கொண்டிருந்தாள்.

ரஞ்சித் கிளாஸை ஓரே மூச்சில் காலி செய் விட்டு வைத்தான்.



"ஸ்வாதி, இங்கே வா!"

"ஒரு நிமிடம் இரு ரஞ்சித்! நாலாயிரம் யிண்ட் இது வரை வாங்கவே முடியாமல் ருந்தது. இப்போது தான் மூவாயிரத்தி றைத் தாண்டியிருக்... போச்! டேஷ் ஆகி ட்டது! போ! உன்னால்தான் என் விமானம் ப்பேராகி விமான நிலையத்தின் மெயின் னன்ஸ் ஹேங்கருக்கு வந்து விட்டது பார்!" ழந்தை போல கைகளை உதறிக் கொண்டுச் ணுங்கினாள் ஸ்வாதி.

"நிஜமான குட்டிப் பிளேன் வாங்கி ட்டுவதற்குத் திட்டமிட வேண்டியவர்கள் நாம். நேரத்தை வேஸ்ட் பண்ணாதே! இப்படி வா!"

டி.வி.யை அணைத்து விட்டு அவனருகில் அமர்ந்து அவன் தொடையில் வைத்திருந்த சிகரெட் எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டாள் ஸ்வாதி.

"சார்லஸ் லேசுப்பட்டவன் இல்லை."

"ஆமாம் கொஞ்சம் முரடன் - உன்னைப் போலவே! சிங்கப் பல்! பார்!" தன் கீழுதட்டை இழுத்து உள்புறம் சின்னக் காயத்தைக் காட்டினாள் ஸ்வாதி.

"ஸ்வாதி, அவனைக் குஷிப்படுத்துவதற்காக மட்டும் உன்னை அவனுக்கு அனுப்பி வைக்கவில்லை நான்."

"அவன் களைத்துப் போய் உறங்கினதும் அவனது சூட்கேஸ்களில் கொஞ்சம் ஆராய்ச்சி நடத்தினேன் ரஞ்சித் நீ குறிப்பிட்டது போல டைரியோ, டெலிபோன் நம்பர்கள் கொண்ட புத்தகமோ, வேறு ஏதும் விபரக் குறிப்போ இல்லை. கொஞ்சம் வெளிநாட்டு கரன்ஸி

இருந்தது. ஒரு கோல்ட் ரிவால்வர் இருந்த இந்தியாவின் கைடு புத்தகம்! அவ்வளவுதா இருந்தது. ஆமாம் ரஞ்சித். அவனுடைய பொரு களில் ஆராய்ச்சி நடத்தச் சொன்னது எதற்காக?

ஸ்வாதி ஒரு சிப்ஸை எடுத்துக் கடித்தப சாய்ந்து அமர்ந்து கொண்டு கேட்டாள்.

"ஸ்வாதி சார்லஸ் யார்? ஒரு மேனேஜ மாதிரி! ஒரு மீடியேட்டர் மாதிரி! ஒரு ஏஜண் மாதிரி! இதுவரை அவன் தந்த ஐந்து லட்ச களுக்கு ஆசைப்பட்டு வரிசையாக மூன் வருடத்தில் ஐந்து கொலைகளைச் செய்தாயிற் 'இன்னாரைக் கொல்' என்றான் திட்ட போட்டோம் கொன்றோம்- நம் கைகளில் கரன்சி கட்டுகள் விழுந்தன. கொல்லப்பட்டவ களுக்கும், இந்த சால்லஸுக்கும் என்ன சம்பந்தம் என்று நீ சொல்வாய்"

"உண்மை இப்போது அவன் பட்டியல் அதிகாரியில் இருந்து அமைச்சருக்குத் தாவியிருக்கிறதே!"

"அதனால்?"

"மத்திய அமைச்சருக்கும் இந்த சார்லஸுக்கும் என்ன நேரடி விரோதம் இருக்க முடியும்?"

"நேரடி விரோதமென்ற அவன் சொன்னானா? இல்லையே? செய்யப்படுவதெல்லாம்அரசியல் பின்னனி கொண்ட கொலைகள்!"

அந்தப் பின்னனியைத்தான் தெரிந்து கொண்டால் என்ன என்று தோன்றுகிறது ஸ்வாதி."

"இத்தனை நாள் எழாத கேள்வி இந்த தடவை மட்டும் ஏன் ரஞ்சித்!"



"இரண்டு காரணங்கள்! ஒன்று! அவன் தரத் யாராக இருந்த இருபத்தி ஐந்து லட்சங்கள் ரண்டு நான் உயர்த்தி கேட்டதும் மறு ப்பின்றி உடனே நாற்பது லட்சங்களுக்குத் தயாராகியது"

"அதனால் என்ன?"

"மண்டு! உனக்குப் புரியவில்லையா? இந்த அரசியல் கொலைகளை நிகழ்த்தத் திட்டமிடு வது ஒரு தனி நபரல்ல ஒரு விஷமமான அன்னிய அமைப்பாக இருக்க வேண்டும். அந்த அமைப்பு பரை முடிவு செய்து பொறுப்பை சார்லஸிடம் ப்படைக்கிறது. சார்லஸ் நம்மை மாதிரி சில செயல் வீரர்களை வைத்துக் கொண்டு காரியங்களைச் செய்து முடிக்கிறான். ரிஸ்க் டுப்பதும் உயிரைப் பணயம் வைப்பதும் நாம்! கணிசமாக தொகை சம்பாரிப்பது அவன்! ஆச்சார்ய மல்ஹோத்ரா சாதாரண நபரல்ல இந்தியாவின் முக்கியத் தூண்களில் ஒருவர் பிரமாதமான பொருளாதாரத் திட்டங்களை அடுத்தடுத்து செயல்படுத்தி இந்தியாவை ஒரு புதிய முன்னேற்றப் பாதை நோக்கி மெதுவாக அழைத்துச் செல்பவர். இந்த சமயத்தில் ஆச்சார்ய மல்ஹோத்ரா இறந்து போனால், அது அவரது குடும்பத்தாருக்கு மட்டும் நஷ்டமில்லை இந்தியாவுக்கே நஷ்டம்!"

"இவ்வளவு முக்கியமானப் பிரமுகரைக் கொலை செய்வதற்கு ஒருவார்த்தை அதிகம் வேண்டும் என்றுச் சொன்னதுமே பதினைந்து லட்சம் சேர்த்துத் தர சம்மதிக்கிறான் என்றால், அவன் அந்த அமைப்பிடம் எவ்வளவு பேசியிருக்க வேண்டும்?"

"எவ்வளவு பேசியிருக்க வேண்டும்?"

"என் கணிப்பு - ஒரு கோடிக்குக் குறையாமல் பேசியிருக்க வேண்டும்."

"சரி எவ்வளவோ பேசி விட்டுப் போகட்டும் நீ கேட்ட நாற்பது தான் தரத் தயாராக இருக்கிறானே..."

"நடுவில் இந்த ஆள் எதற்கு? அந்த அமைப்போடு நமக்கு நேரடித் தொடர்பு ஏற்பட்டு விட்டால் மொத்தத் தொகையும் நமக்குத்தானே வரும்? மேஸ்த்திரி வேலை பார்த்து பல லட்சங்களை இவன் சுருட்ட முடியாதல்லவா?"

"ரஞ்சித், ஆனால் நீ ரொம்பத்தான் பேராசைப்படுகிறாய். தலைக்கு ஐந்து வீதம் ஐந்து கொலைகள் செய்தோம் இந்தத் தடவை ஒரே கொலையில் நாற்பது கிடைக்கிறது. இதை நினைத்து சந்தோஷப்படு! அனாவசியமாக உள்சதிகளில் ஈடுபட வேண்டாம் என்று தான் எனக்குத் தோன்றுகிறது."

"ஸ்வாதி, அவன் கொடுத்த விபரங்கள் எல்லாவற்றையும் படித்து விட்டேன். அமைச்சர் ஆச்சார்ய மல்ஹோத்ராவை கொலை செய்வது சாதாரண விஷயமில்லை."

"ஏன்?"

ரஞ்சித் மறுபடி கிளாசை நிரப்பிக் கொண்டு, சிகரெட் ஒன்றை அவளுடைய நெருப்பிலிருந்து பற்ற வைத்துக் கொண்டு, தன் கையில் விபரக் குறிப்புகளை எடுத்துக் கொண்டு சொன்னான்.

"கடந்த ஒரு வருடத்தில் ஆச்சார்ய மல்ஹோத்ராவின் உயிருக்கு இரண்டு முயற்சிகள் நடந்திருக்கின்றன ஸ்வாதி."

"எப்படி?"

"ஒருமுறை டெல்லியிலிருந்து அவர் நேபாளத்திற்கு தனி விமானத்தில் புறப்பட்டுச் சென்றார். புறப்பட்ட விமானம் திடீரென்று மறுபடி விமான நிலையத்திற்குத் திரும்பியது. அவசர அவசரமாக அமைச்சர் இறக்கி பாதுகாப்பாக அழைத்துச் செல்லப்பட்டார். விமானம் சோதனையிடப்பட்டதில் சந்தி வாய்ந்த வெடிகுண்டு கண்டெடுக்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டது. இது தொடர்பாக இருநூற்றி நாற்பது பேரை தீவிரமாக விசாரித்தும் வெடிகுண்டு வைத்த நபரைக் கண்டுபிடிக்க முடியவில்லை."

"விஷயம் எப்படித் தெரிந்ததாம்?"

"அனாமதேய டெலிபோன் கால் வந்திருக்கிறது. போன் செய்து தகவல் கொடுத்தவனையும் கண்டு பிடிக்க முடியவில்லை"

"சரி. இன்னொரு முயற்சி?"

"ஆறு மாதம் முன்பாக பத்து நாட்கள் ஓய்விற்காக அமைச்சர் தன் குடும்பத்துடன் அந்தமான் தீவிற்குச் சென்றிருந்த போது, அவருடைய காரை ஒரு ட்ரக் மோசமாக இடித்ததில் அவர் சின்னக் காயங்களுடன் தப்பினார் ட்ரக் ஓட்டியவனைக் கைது செய்தார்கள். அவன் குடித்திருந்ததைக் கண்டுபிடித்தார்கள். அவனைத் தீவிரமாக விசாரித்ததில் நிகழ்ந்தது ஒரு எதிர்பாராத விபத்துதான் என்று முடிவுக்கு வந்தார்கள். ஆனாலும் இந்தியப் பத்திரிகைகள் அதைச் சதியாக இருக்கலாம் என்கிற சந்தேகத்துடன் தான் கட்டுரை எழுதின."

"இரண்டு முறை உயிர் தப்பியவர் இந்த முறை தப்பப் போவதில்லை, பாவம்!"

"அந்தளவு சுலபமாகப் பேசாதே ஸ்வாதி. இந்த இரண்டு சம்பவங்கள் காரணமாக அமைச்சருக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் கடுமையாக விஸ்தரிக்கப் பட்டிருக்கின்றன."

"என்னென்ன பாதுகாப்பு ஏற்பாடுகள்?"

"அமைச்சரின் வீடு பிருத்விராஜ் ரோட்டில் இருக்கிறது. இந்த ரோட்டின் முனையிலேயே யூனிஃபார்ம் அணியாத பாதுகாப்பு அதிகாரிகள் உலாவுகிறார்கள் அவர்களுக்கு லேசாக சந்தேகம் ஏற்பட்டாலும் எந்த வாகனத்தையும் நிறுத்தி தொளாயிரம் கேள்விகள் கேட்கிறார்கள். அந்த சாலையில் காரில் போகும் போது தன் சட்டை பட்டனைப் போட்டுக் கொள்வதற்காக காரைக் கொஞ்சம் வேகம் குறைத்தாலும் போதும். அவன் ஏதோ அமைச்சரின் வீட்டை நோட்டமிட வந்தவனாகக் கருதப்பட்டு ஹராஸ் செய்யப்படுகிறான். நடந்து போகிறவன் கதியை நீயே நினைத்துக் கொள்"

"சரி புரிகிறது. அவரை வீட்டில் வைத்து நெருங்கவே முடியாது. வெளியில்?"

"அவர் புல்லட் புரூஃப் ஜாக்கெட் அணிகிறார் புல்லட் புரூஃப் காரில் தான் பயணம் செய்கிறார். அவரது காரிலேயே இயந்திரத் துப்பாக்கி மனிதன் ஒருவன் பயணம் செய்வான். தவிர, முன்னாலும் பின்னாலும் ஆயுதங்களுடன் பாதுகாப்பு அதிகாரிகளின் கார்கள் செல்லும், இப்போதெல்லாம் அவர் பொதுக் கூட்டங்களில் அதிகம் கலந்து கொள்வதில்லை. மீறி கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளிலும் குண்டு துளைக்காத மேடையில் தான் நின்றுப் பேசுகிறார்."

"நீ சொல்வதை எல்லாம் வைத்துப் பார்த்தால் அமைச்சரைப் பக்கத்தில் கூட நெருங்க



முடியாது போலிருக்கிறதே! எப்படிச் செய்யப் போகிறோம் இதை!"

"இன்னும் நான்கு தினங்களில் ஒரு நிகழ்ச்சி இருக்கிறது ஸ்வாதி அந்த நிகழ்ச்சியில் வைத்து தான் அவரைக் கொலை செய்யத் திட்டமிட்டுள்ளேன்"

"என்ன நிகழ்ச்சி?"

"கித்வாய் நகரில் ஸ்ரீ அரபிந்தோ மார்க் ரோடும், ரிங் ரோடும் வெட்டிக் கொள்ளும் ஜங்ஷனில் புதிதாக அமரர் ராஜீவ் காந்தியின் சிலைத் திறப்பு விழா நடக்க இருக்கிறது ஸ்வாதி"

"என்றைக்கு?"

"வரும் இருபத்தி நான்காம் தேதி காலை பதினொரு மணிக்கு! பிரமாதமாக மேடைகள். அலங்காரங்கள் நடந்து வருகின்றன. இடத்தைப் போய்ப் பார்த்து விட்டு தான் வந்தேன். இந்தச் சிலையை அமைச்சர் ஆச்சார்ய மல்ஹோத்ராதான் திறந்து வைக்கிறார். சிலைக்கு முப்பது மீட்டர் தொலைவில் அவரின் கார் நிற்கப் போகிறது. சிலையை நோக்கி சிகப்பு கார்பெட்டில் அவர் நடந்து வரப் போகிறார். இரண்டு பக்கமும் பள்ளிச் சிறுமிகள் நின்று அவருக்கு பூக்களைத் தூவி வரவேற்கப் போகிறார்கள். சிலைக்கு அருகில் செல்ல பதினான்கு படிகள் அமைச்சர் மேலே ஏற வேண்டும். ஏறி சிலையை மூடியுள்ள பட்டுத் துணியின் சுருக்கு முடிச்சை இழுத்து விலக்குவார். பிறகு இறங்கி அருகில் அமைக்கப் பட்டுள்ள மேடைக்குச் சென்று பேசுகிறார்."

"சரி இதில் நாம் செயல்படப் போவது எங்கே?"

"பதினான்கு படிகள் ஏறி மேலே வந்து

சிலைக்கருகில் நின்று அந்த சுருக்கு முடிச்சை
இழுக்கப் போகிறாரே - அந்த இடத்தில் மேடை
ரொம்பச் சின்னதாக இருக்கிறது. அதிகபட்சமாக
அமைச்சரைத் தவிர இன்னும் இரண்டு பேர்தான்
நிற்கலாம். பேசுவதற்கென்று தனியாக பெரிய
மேடை அமைத்திருப்பதால், இங்கே ரொம்ப
சின்னதாக மேடை அமைந்திருப்பது நம்
சௌகரியத்திற்காகத்தான் ஸ்வாதி."

"புரிகிறது. அமைச்சர் பதினான்கு படிகள் ஏறி
சிலைக்கருகில் அந்த சின்ன மேடைக்கு வந்ததும்
நாம் தயாராகிறோம். அவர் சுருக்குக் கயிற்றைப்
பிடித்து இழுத்ததும், எல்லோரும் விலகும்
திரையையும், தெரியும் சிலையையும் பார்த்துக்
கொண்டிருக்க, நாமோ அதையே சிக்னலாக
எடுத்துக் கொண்டு அவரைச் சுட்டுத் தள்ளி
விடுகிறோம். கரெக்ட்டா?"

"கரெக்ட்தான் ஆனால் இந்த சுடுகிற
விஷயத்தில்தான் நிறைய ஏற்பாடுகள் தேவைப்
படுகின்றன. முதல் விஷயம், அவர் புல்லட்
ப்ரூஃப் ஜாக்கெட் அணிபவர் என்பதால் நம் குறி
அவரின் தலைக்குத்தான் இருக்க வேண்டும்.
என்னதான் நாம் குறி பார்த்துச் சுடுவதில்
வல்லவர்கள் என்றாலும் ஒரு நபரை மிஸ்ஸாகா
மல் தலையில் சுடுவதற்குக் கொஞ்சம் க்ளோஸ்
ரேஞ்ச் தேவை! க்ளோஸ் ரேஞ்சில் நின்று குறி
தவறாமல் சுடவும் வேண்டும். சுட்டவர் யார்
என்று புரியாமல் அனைவரும் பரபரப்பு காட்டும்
போது, மாட்டிக் கொள்ளாமல் நழுவவும்
வேண்டும்."

"நியாயம் தான். திட்டத்தில் நாம் தப்பிப்பது
என்பதும் ஒரு முக்கியமான கட்டம்தான்."



"நாளைக்குக் காலையில் நாமிருவருமாக
அந்த சிலை நிர்மாணிக்கப்பட்டிருக்கும் இடத்
திற்குப் போகலாம் ஸ்வாதி நாம் எங்கேயிருந்து
செயல்பட முடியும் என்று அங்கே போய்ப்
பார்த்துத் தீர்மானிக்கலாம். இதற்கு நடுவில்."

"இதற்கு நடுவில்....?"

"நாளைக்கும் நீ சார்லசுக்கு உன் உடம்பை
தாராளமாகக் கொடு. கூடவே வரவர என்னைப்
பிடிக்காதது போல் பேசு. சார்லஸ் விரும்பினால்
அவனோடு நிரந்தர கான்குபெயினாக இருந்து
விடச் சம்மதம் என்று சொல்! அவனுக்கு உன்
மேல் எக்கச்சக்கமாக தாபம் இருக்கிறது."

"தெரியும் இன்று கூட ஒரு வார்த்தை
சொன்னான்"

"என்ன சொன்னான்?"

"ரஞ்சித் உன்னை கல்யாணம் செய்து
கொள்ளப் போகிறானாமே, அவன் அதிர்ஷ்டக்
காரன்! என்றான்."

"பார்த்தாயா? ஒரு பெண் அந்த முக்கிய
மான சந்தர்ப்பத்தில் விவேகமாக நடந்து
கொண்டால் எவ்வளவோ சாதிக்கலாம் ஸ்வாதி.
நம் சரித்திரங்களும், சரிந்த பல சாம்ராஜ்யங்களும்
கற்றுத் தந்தப் பாடமிது. நீயும் முயற்சி
செய்யேன்."

"ரஞ்சித், உனக்கு எக்ஸாக்ட்டாக என்ன
தகவல் வேண்டும்?"

"அவனை ஏஜண்ட்டாக வைத்திருப்பது
யார்? அது தான் தெரிய வேண்டும் எனக்கு!"

"விடு! நாளைக்கு நான் முயற்சிக்கிறேன்"
என்ற ஸ்வாதியின் காதருகில் சன்னக் குரலில்
ரஞ்சித் ஒரு செய்தி சொல்ல, "ச்சீ! நான்

என்னவோ செய்கிறேன்! உனக்குத் தேவை தகவல்தானே?" என்றாள் ஸ்வாதி செல்ல கோபத்துடன்.

# 6

சர்தார்ஜி வேடத்தில் இருந்த அகஸ்டின் அந்த சிறிய ஹோட்டலில் சிந்தனையோடு சப்பாத்தி சாப்பிட்டுக் கொண்டிருந்தான். ஸ்பீக்க களில் ஏகப்பட்ட வயலின்களுக்கு மத்தியில் ஹிந்திப் பாடலில் அந்தப் பெண் 'ராத்திரிக்கா காத்திருக்க வேண்டாம், வீட்டில் யாருமில்லை பகலிலேயே வைத்துக் கொள்ளலாம் - சூரியன் என்ன ராத்திரியிலா வருகிறான்? நீ சூரியனை போலத்தானே? அதனால்தானே நீ பார்க்கு போதெல்லாம் என் தேகம் தீப்பற்றி எரிவதை போல் உணர்கிறேன்' - என்ற அர்த்தத்தில் பாடிக் கொண்டிருந்ததை அவனுக்கு இரண்டு மேஜை தள்ளி அமர்ந்திருந்த நான்கு இளைஞர்க மேஜையில் தாளம் போட்டு ரசித்துக் கொண் டிருந்தார்கள்.

அகஸ்டினுக்கு ஏனோ அவர்களைப் பார்க்க கோபமாக வந்தது.

உங்களில் யாருடைய காதலியாவது இந்த நிமிடம் ஆஸ்பத்திரியில் உயிருக்குப் போராடி கொண்டிருக்கிறாளா? உங்களில் யாருக்காவது இப்போது மூன்று லட்சம் பணம் தேவைப் படுகிறதா? உங்களில் யாரையாவது போலீஸ் தேடிக் கொண்டிருக்கிறதா? உங்களில் யாராவது காதலியைச் சந்திப்பதற்காக ஜெயிலில் போயிருக் கிறீர்களா?



அகஸ்டின் தன் காலை லேசாக மிதித்து விட்டு, ஸாரி கூடச் சொல்லாமல் தாண்டி நடந்த ஒரு இளைஞனை சட்டையைப் பிடித்து இழுத்து முகத்தில் குத்த எழுந்த ஆத்திரத்தை சிரமப் பட்டு அடக்கிக் கொண்டான்.

இப்படித்தானே எடுத்ததற்கெல்லாம் கையைத் தூக்கிக் கொண்டு முரடனாயிருந்தேன் ான்! என்னைக் கட்டுப் படுத்தியவள், எனக்கு ான் போட்டவள் விக்டோரியாதானே?

அகஸ்டினுக்குப் பல வருடங்கள் முன்பு நடந்த அந்தச் சம்பவம் நினைவுக்கு வந்தது.

அப்போது படித்து வேலை கிடைக்காத வெறுப்பும், எரிச்சலும் மண்டியிருந்த நேரம் யாராவது சிரிப்பதைப் பார்த்தாலே கோபம் வருகிற அளவு உள்ளுக்குள் நெருப்பு எரிந்து கொண்டிருந்த நேரம்.

அப்போது அவனும் சரி, விக்டோரியாவின் அப்பா ரொஸாரியோவும் சரி மத்திய டெல்லியில் இருந்து தள்ளியிருந்த ராமகிருஷ்ணபுரத்தில் குடியிருந்தார்கள். அந்த ஏரியாவில் ஹரிலால் என்பவன் ஒரு ரெடிமேட் எக்ஸ்போர்ட் கம்பெனி போர்டை மாட்டினான். நிறைய தையல் மிஷின் களை வாங்கிப் போட்டான்.

அந்த ஏரியாவில் படித்து விட்டு வீட்டில் சும்மாயிருக்கும் பெண்கள் எல்லாம் அந்த நிறுவனத்தில் சேர்ந்து ஆடைகளைத் தைத்துக் கொடுத்தார்கள். மூன்று ஷிஃப்டுகள் வேலை நடந்தன. எத்தனைப் பெண்கள் வேலைக்கு என்று போய் கேட்டாலும் ஹரிலால் உடனே சேர்த்துக் கொண்டு விடுவான்.

அந்த நிறுவனத்தில் வேலை பார்த்த ஒரு பெண் திடீரென்று காணாமல் போனாள்.

பெற்றோர்கள் தேடிப் பார்த்து தன் மகள் யாராவு காதலனுடன் ஓடிப் போயிருக்க வேண்டு என்றுத் தீர்மானித்தார்கள். இரண்டு மாத கழித்து ஏரியாவில் மற்றொரு பெண் காணாம போனாள். அவளும் அதே நிறுவனத்தில் வேலை பார்த்தவள். மறுபடி மூன்று மாதம் கழித் மற்றொரு பெண்...

ஒரு துணிச்சல்கார இன்ஸ்பெக்டர் தீவிரமா இறங்கி ஹரிலால் துணிகளை மட்டும் ஏற்றுமதி செய்யவில்லை, பெண்களைக் கடத்தி அவ களை விபச்சாரத்திற்கு ஈடுபடுத்தி வற்புறுத் வெளிநாட்டுக்கு சப்ளை செய்து கொண்டிரு ததைக் கண்டு பிடித்து, ஹரிலாலையும் அரெஸ் செய்தார்.

அப்போது அந்த ஏரியாவில் இருந்தவர்க எல்லாம் ஹரிலால் மேல் ஆத்திரப்பட்டார்கள் பொங்கியெழுந்தது அகஸ்டினும் அவ தோழர்களும்.

ராத்திரியில் ஹரிலாலின் குடோவ்னுக்கு சென்று ஒரு தையல் இயந்திரத் தைக் கூட பாக் வைக்காமல் எல்லாவற்றையும் அடித் நொறுக்கினார்கள். தைத்து வைக்கப்பட்ட துணிகளை எல்லாம் கொண்டு வந்து வீதியி போட்டு பெட்ரோல் ஊற்றிக் கொளுத்தினார்கள்

போலீஸ் அவர்களைத் தேடியபோது தலைமறைவானார்கள் அகஸ்டின் தன் மாம ரொஸாரியோ வீட்டிற்கு வந்து பதுங்கி கொண்டான்.

ஹரிலால் ஜாமீனில் வெளியே வந்தா அரசியலில் பெரிய ஆசாமிகளைப் பிடித்து அந் தன் மீதான வழக்கை திசை திருப்பி தனக்கு



அதற்கும் சம்பந்தமேயில்லை என்று சாதித்த தோடு - தன் பொருளுக்கு நஷ்டமேற்படுத்திய அகஸ்டின் குழுவின் மேல் புகார் கொடுத்தான்.

அப்போதுதான் விக்டோரியா அகஸ்டினிடம் மனம் விட்டுப் பேசினாள்.

"உன் ஆத்திரத்தால் என்ன சாதனை நடந்து விட்டது அகஸ்டின்? பார்! இப்போது போலீஸ் உன்னையே தேடிக் கொண்டிருக்கிறது! வன்முறை எதையும் சாதித்து விடாது பொறுமையும் சாதுர்யமும்தான் வெற்றி தரும்" என்றாள்.

"என்ன விக்டோரியா பேசுகிறாய்நீ? அந்த ஹரிலால் செய்தது நியாயம் என்கிறாயா?"

"சேச்சே! அப்படிச் சொல்லவில்லை. உன் அணுகு முறைதான் தப்பு என்கிறேன்"

"உனக்கு அவன்மேல் கோபம் வரவில்லையா?"

"வந்தது"

"நீ பெண்! அடக்கிக் கொண்டாய்! நான் ஆண்! என்னால் முடியவில்லை பாடம் புகட்டத்தான் அப்படி இறங்கினேன்"

"பாடம் புகட்டிவிட்டாயாக்கும்? ஆன சேதத்திற்கெல்லாம் அந்த ஷேட் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியில் நஷ்ட ஈடு வாங்கிக் கொள்வான். தன் மேல் விழுந்த குற்றச்சாட்டில் இருந்தே தப்பி விட்டானே, எப்படி?"

"பணம்! அரசியல் செல்வாக்கு! எனக்கு எல்லாம் தெரியும் விக்டோரியா"

"சொல்லேன், என்ன தெரியும்?"

"குற்றங்களைக் கண்டுபிடித்த அந்த இன்ஸ்பெக்டருக்கு மூன்று லட்சம் கொடுத்து

விலைக்கு வாங்கி விட்டான். அவருக்கு ஒ பிளாட் எழுதித் தந்திருக்கிறான் தவிர ஹ லாலுக்கு செகரெட்டேரியட்டில் மூத்த அதிகா மாதுல்ராம் உறவினன். நேராக அவனிடம் பே விட்டான்."

"சரி. இந்த விஷயமெல்லாம் பொ மக்களுக்குத் தெரியுமா?"

"தெரியாது."

"தெரியப்படுத்தேன். அதுதான் உன்ன யான போராட்டமாக இருக்கும். அடித் நொறுக்கி பொருளாதாரச் சேதம் விளைவிப்ப மட்டும் தான் எதிர்ப்பு காட்டுகிற விஷய இல்லை."

"என்ன சொல்கிறாய் நீ?"

"உடல் பலத்தைவிட மூளையின் பலத் நம்பு அகஸ்டின் மகாத்மா காந்திக்கு உடலி பலமா இருந்தது? ஜாலியன் வாலாபாக் ப கொலைகளை எல்லாம் நிகழ்த்திய ஒ முரட்டுத்தனமான பலம் வாய்ந்த, இரக்கமற் பிரிட்டிஷ் அரசாங்கத்தை எதிர்க்க அவ ஆயுதமாக வன்முறையைத் தேர்ந்தெடுத்தா தன் புத்தியைத்தான் நம்பினார். சத்தியத்தைதா நம்பினார்."

"அந்த மாதிரி நான் என்ன செய்ய வேண் மென்கிறாய்?"

"நாட்டில் எத்தனை நேர்மையான பத்தி கைகள் இருக்கின்றன. ஒரு நல்ல பத்திரி யாளனைப் போய்ப் பார்! ஹரிலால் எப்ப யெல்லாம் சதிசெய்து இந்தக் குற்றத்திலிருந் தப்பினான் என்று உனக்குத் தெரிகிற தகவ களை எல்லாம் சொல். ஒரு புத்திசாலி நிருப அதற்கு மேல் சொந்தமாக ஆராய்ச்சியில் இறங்



விடுவான். அந்த ஷேட் ஒரு இன்ஸ்பெக்டரை மட்டும் தான் விலைக்கு வாங்க முடியும் சட்டத் துறையையே வாங்க முடியாது பொது மக்கள் அத்தனைப் பேரையும் விலைக்கு வாங்க முடியாது."

சிலிர்த்துப் போனான் அகஸ்டின் விக்டோரியா சொன்னதைப் போலவே ஒரு பிரபல ஆங்கிலப் பத்திரிகையில் ஆசிரியரைச் சென்று சந்தித் தான் தனக்குத் தெரிந்த தகவல்களைச் சொன்னான். ஒரு பிரபலமான சாமர்த்திய நிருபர் அழைக்கப்பட்டார். பொறுப்பு தரப்பட்டார்.

இரண்டு இதழ்கள் கழித்து ஹரிலால் செய்த தில்லுமுல்லுகள், அதை பெரிய விஷயமாகாமல் மறைக்க எடுத்த நடவடிக்கைகள், அதற்கு உடந்தையாய் இருந்தவர்கள் என்று ஆதாரப் பூர்வமாக ஒரு பெரிய கட்டுரை எழுதி பெண்களைக் கொண்டாடும் இந்த நாட்டில் பெண்களை விற்கின்ற அயோக்யர்களை வெளியே உலாவ விட்டு நம் அரசாங்கம் கையைக் கட்டிக்கொண்டு பார்த்துக் கொண்டு தான் நிற்கப் போகிறதா? என்றுக் கேட்டிருந்தார்கள்,

பாராளுமன்றக் கூட்டத் தொடரில் எதிர் கட்சிகள் பிடித்துக் கொண்டன. பத்திரிகை விபரங்களின் அடிப்படையில் ஒரு உயர் அதிகாரி இந்த விஷயத்தை உடனே எடுத்துக் கொண்டு நடவடிக்கை எடுப்பார்' என்று பதில் சொல்லப் பட்டது.

இரண்டு தினங்களில் ஹரிலால் கைது செய்யப்பட்டார். லஞ்சம் வாங்கிய இன்ஸ்பெக்டர் டிஸ்மிஸ் செய்யப்பட்டார். செகரெட்டேரியட்டின் மூத்த அதிகாரி சஸ்பெண்ட் செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டார்!

சாக்லேட்டுடன் விக்டோரியாவிடம் வந்தான் அகஸ்டின்.

"இந்தா விக்டோரியா! இது உனக்குக் கிடைத்த வெற்றி!"

"இல்லை அகஸ்டின் அமைதிக்கும் புத்திக்கும் கிடைத்த வெற்றி! 'பதட்டம் எதையும் சாதிக்காது நிதானம் நின்று வெல்லும்' என்கிற அனுபவமொழிக்குக் கிடைத்த வெற்றி"

"விக்டோரியா இத்தனை நாட்களாக உன்னை ஒன்றும் தெரியாத சின்னப் பெண் என்று தான் நினைத்திருந்தேன். என் கணிப்பு தப்பு! நீ பெரிய ஆள்!"

"பெரிய வார்த்தை சொல்லாதே அகஸ்டின். இதெல்லாம் என் சொந்த புத்தி இல்லை. செத்துப் போன என் அம்மா அடிக்கடி சொல்பவை தான். அம்மா நமது தேசிய விடுதலைப் போராட்டத்தில் பெரிய பங்கு வகித்தவர் அகஸ்டின் உன்னைப் போலதான் அவருக்கும் அடிமை நாட்டில் முதலில் விடுதலை ஆவேசத்தில் வன்முறை தான் சரியான வழியாகப் பட்டதாம். நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அமைத்த புரட்சிப்படையில் சேர்வதற்குக் கூடத் தயாராகி விட்டாராம். அந்த சமயத்தில் தான் அலஹாபாத்தில் மகாத்மா காந்திஜி பேசிய ஒரு பொதுக் கூட்டத்திற்கு யதேச்சையாகப் போயிருக்கிறார் அஹிம்சையின் சக்தி பற்றி, அமைதி வழிப் போராட்டம் பற்றி இரண்டு மணி நேரம் தேசப்பிதா பேசிய பேச்சுக்களைக் கேட்டு உணர்ச்சிவசப்பட்டுப் போனாராம் அம்மா காந்திஜியின் வழியே சரியான வழி என்று உடனேத் தீர்மானித்து விட்டு காங்கிரஸில் சேர்ந்ததோடு இல்லாமல் காந்திஜியின் அறவழிப் போராட்டங்கள் ஒன்றுகூட விடாமல் கலந்து கொண்டிருக்கிறார். இந்திய சுதந்திரம் அடைந்த பிறகு தான் திருமணம் செய்து கொள்வேன் என்று பிடிவாதமாக இருந்து சுதந்திரத்திற்குப் பிறகு தன் இருபத்தி ஆறாவது வயதில் தான் என் அப்பாவை திருமணம் செய்து கொண்டார் அம்மா."

அவள் சொல்லிக் கொண்டேயிருக்க திடீரென்று அவளின் இரண்டு கைகளையும் பிடித்துக் கொண்டு, "விக்டோரியா, எனக்கு உன்னை ரொம்ப ரொம்ப பிடித்திருக்கிறது" என்று அன்றைக்குத்தான் முதல் முறையாகச் சொன்னான் அகஸ்டின்.

அவளிடமிருந்து அமைதி வழியே சிறந்த வழி என்று மனதில் பதித்துக் கொண்ட அதே அகஸ்டின் தான் மற்றொரு சந்தர்ப்பத்தில் அதே விக்டோரியாவுக்காக மூன்று பேரை பதினேழு இடங்களில் குத்தி......

பெருமூச்சு விட்ட அகஸ்டின் தன் நினைவுகளில் இருந்து கலைந்தான் எழுந்து கைககழுவி விட்டு காசு தந்து விட்டு வெளியே வந்தான்.

எனக்கு மூன்று லட்சம் தேவை! எப்படி? எப்படி அடைவது அதை? யாரைக் கேட்டால் கிடைக்கும்?

சட்டென்று அவனுக்கு தன்னுடைய முன்னாள் நண்பன் ரஞ்சித் நினைவு வந்தது அவன் இப்போது ஏதோ தொழிலில் முன்னேறி வசதியாக இருப்பதாகச் சொன்னார்களே...

## 7

ஸ்வாதியின் லாங் நைட்டியின் ஒவ்வொரு பட்டன்களாக ரஞ்சித் கழற்றிக் கொண்டிருக்கும் போது தான் வாசல் அழைப்பு மணி ஒலித்தது.

"ச்சே!" என்றான் ரஞ்சித். "நீ போய்ப் பார்க்கிறாயா ஸ்வாதி?"

"எழுந்து போய் பார்க்கிற நிலையிலா என்னை வைத்திருக்கிறாய் நீ?"

"ஓக்கே" என்று எழுந்து கொண்டு. கதவை மூடிக் கொள், வந்திருப்பவனை அனுப்பி விட்டு வருகிறேன். "கைலியை டைட்டாகக் கட்டிக் கொண்டு ஸ்டாண்டிலிருந்து ஒரு டவல் எடுத்து சுழற்றி மார்பில் போட்டுக் கொண்டு பெட்ரூமை விட்டு வெளியே வந்தான் ரஞ்சித்.

படிகள் இறங்கி கீழே ஹாலுக்கு வந்தான். ஹாலின் பெரிய விளக்கொன்றைப் போட்டுக் கொண்டு கதவுக்குச் செல்வதற்கு முன் மற்றொரு முறை மணி ஒலித்தது.

"கமிங்" சலித்துக் கொண்டே சென்று கதவில் இருந்து சிறிய வட்டக் கண்ணாடி வழியாக வெளியே நிற்பவனைப் பார்த்தான்.

அந்த ஸ்தார்ஜியை அவனால் அடையாளம் காண முடியவில்லை.

"யாரது?" என்றான் கதவைத் திறக்காமல்.

"ரஞ்சித், நான் உன் பழைய நண்பன், அகஸ்டின்" என்று பதில் வந்தது.

அகஸ்டின் உள்ளே வந்து கதவை மூடினான். "ரஞ்சித் நீ எப்படி இருக்கிறாய்? நான் ஒரு பெரிய இக்கட்டில் இருக்கிறேன். எனக்கு உன் உதவி அவசியம் வேண்டும். நீ மறுத்து விடக் கூடாது" என்று அவன் கைகளைப் பிடித்துக் கொண்டுக் கெஞ்சினான் அகஸ்டின்.

ரஞ்சித்துக்கு தூக்கக் கலக்கமெல்லாம் போய் விட்டது.

"இரு அகஸ்டின் பதறாதே! நிதானமாகப் பேசலாம் முதலில் உட்கார்! என்ன நடந்தது? நீ ஜெயிலில் அல்லவா இருந்தாய்? என்ன இந்த வேடம்? எதற்கு இந்த அர்த்த ராத்திரி விஜயம்?"

அகஸ்டினைக் கையைப் பிடித்து அமர வைத்து, தானும் அருகில் அமர்ந்து கொண்டான் ரஞ்சித். "சிகரெட்" என்றான்.

இரண்டு பேரும் பற்ற வைத்துக் கொண்டார்கள்

"நீ நேற்று பேப்பர் பார்க்கவில்லையா ரஞ்சித்? மூந்தா நாள் நான் ஜெயிலிலிருந்து தப்பி விட்டேன்."

"ஏன்?"

"விக்டோரியாவைப் பார்ப்பதற்காக அவள் இப்போது ஆஸ்பத்திரியில் இருக்கிறாள் ரஞ்சித். அவளுக்கு உடனடியாக ஆபரேஷன் செய்து மாற்றுச் சிறுநீரகம் பொருத்தப்பட வேண்டும். இன்றைக்கென்ன தேதி?"

"இருபத்தி இரண்டு"

"இருபத்தி நாலாம் தேதி ஆபரேஷன் செய்தாக வேண்டும். நாளைக்கு காலையில் ஒரு லட்சம் கொடுத்து அதை உறுதி செய்ய வேண்டும். இருபத்தி நாலாம் தேதி பனிரெண்டு மணிக்கு ஆபரேஷன் என்று தீர்மானித்துள்ளார்கள் அதற்கு முன் மீதி இரண்டு லட்சம் கொடுக்க வேண்டும். ஏதாவது ஒரு வழியில் பணம் புரட்டி விடலாம் என்று இந்த ஏற்பாடுகளை எல்லாம் செய்யச் சொல்லி விட்டேன். ஆனால் இந்த நிமிஷம் என்னிடம் நூறு ரூபாய்க்கு மேல் பைசா கிடையாது. என் விக்டோரியாவுக்கு நீ தான் உயிர் தர வேண்டும் ரஞ்சித்" கிட்டத்தட்ட அழுகிற நிலைக்கு அகஸ்டினின் குரல் வந்து விட்டது.

ரஞ்சித் தன் கட்டை விரலின் நகத்தை கடித்துத் துப்பியபடி அவனையேப் பார்த்து கொண்டிருந்தான்.

அவனுக்குள் உடனே ஒரு விதமான திட்ட உருவாகத் துவங்கியது.

"ஆக உனக்கு எவ்வளவு தேவை?"

"மூன்று லட்சம். ரஞ்சித் நாளைக்கு ஒரு லட்சம் நாளை மறுநாள் இரண்டு லட்சம் ப்ளீஸ்... நீ உதவி செய்கிறாயா?"

"இரு! அவசரப்படாதே! நாம் சந்தித்தே பல வருடங்களாயிற்று! திடீரென்று ஒரு நடு ராத்திரியில் வந்து மூன்று லட்சம் கொடு என்றால் நான் எங்கிருந்து எடுத்துத் தர முடியும்? நான் என்ன நோட்டா அடிக்கிறேன்?"

அகஸ்டினின் முகம் சுருங்கியது.

"பெரிய வீடாக இருக்கிறதே! வாசலில் கா நிற்கிறதே! நீ ஷேர் தொழிலில் பெரிய அளவில் முன்னேறி விட்டதாகச் சொன்னார்களே உன்னால் முடியாதா ரஞ்சித்"

"அகஸ்டின் ஒவ்வொருவனின் வாழ்க்கை யிலும ஒவ்வொரு விதமான அந்தரங்கங்கள் இருக்கும்! ரகசியங்கள் இருக்கும்! உன் வாழ்க்கையையே எடுத்துக் கொள்! படித்தாய் கொஞ்ச காலம் வேலை இல்லாமல் திரிந்தாய். பிறகு ஒரு தனியார் நிறுவனத்தில் சேர்ந்தாய் மாமன் மகள் விக்டோரியாவுடன் பைக்கில் டெல்லி முழுக்கச் சுற்றித் திரிந்தாய் உல்லாசமாக சிறகடித்தாய் அப்போது உன்னைப் பார்க்கும் போது எனக்கெல்லாம் எவ்வளவு பொறாமையாக இருக்கும் தெரியுமா? திடீரென்று ஒரு நாள் மூன்று பணக்காரப் பையன்களை ஒரே நாளில் கொலை செய்து விட்டு போலீசில் சென்று



சரணடைந்தாய் என்னைக் கிண்டல் செய்தார்கள் ஆத்திரம் தாங்காமல் கொலை செய்தேன் என்று ஸ்டேஷனில் சொன்னாய். அதையே கோர்ட்டிலும் திரும்பத் திரும்பச் சொன்னாய் உனக்கு மனநிலை பிசகின நிலையில் இந்தக் கொலைகளைச் செய்ததாக உன் வக்கீல் வாதாடி மரண தண்டனையிலிருந்து ஆயுள் தண்டனையாக மாற்றினார். ஆனால் அன்றும் சரி, அதற்குப் பிறகும் சரி நீ கொலைக்காகச் சொன்ன காரணத்தை எத்தனையோ பேர் நம்பவில்லை. நம்பாதவர்களில் நானும் ஒருவன் அகஸ்டின் சொல்! அதன் பிறகு நான் உதவுவது பற்றி ஒரு முடிவுக்கு வருகிறேன்" என்றான்

அகஸ்டின் ரஞ்சித்தை உற்றுப் பார்த்தான், "சொல்கிறேன் ரஞ்சித் அந்த ரகசியத்தைச் சொல்வதால் என் விக்டோரியாவின் உயிரை நீ காப்பாற்றுவாய் என்றால் நிச்சயம் நான் சொல்கிறேன் ஒரு நாள் விக்டோரியாவின் அப்பா வெளியூர் சென்றிருந்தார் அந்த சுதந்திரத்தில் நான் பைக்கில் அவளைக் கூட்டிக் கொண்டு சுற்றினேன். மாலையில் புறப்பட்ட நாங்கள் ஒரு கண்காட்சி, ஷாப்பிங் என்று சுற்றி விட்டு ஒரு ஹோட்டலில் டிபன் சாப்பிட்டோம். அதன் பிறகு இரண்டாம் காட்சி சினிமா செல்லத் தீர்மானித்து நாங்கள் போன பல தியேட்டர்களில் டிக்கெட் கிடைக்கவில்லை படமா முக்கியம்? அந்த இருட்டுத் தனிமைதானே தேவை? அதற்காக நகரத்திற்கு வெளியிலிருந்த ஒரு தியேட்டருக்குச் சென்றோம்."

"அப்புறம்?"

"நாங்கள் படம் பார்த்துக் கொண்டிருந்த போது..." என்றான் அகஸ்டின்.

திரையில் ரிஷிகபூரும், டிம்பிள் கபாடி யாவும் ஒரு பூவை உதட்டுக்கு நடுவி வைத்துக் கொண்டு முத்தம் கொடுத்துக் கொள்ள, அகஸ்டின் அருகில் அமர்ந்திருந்த விக்டோரியா நெளிந்தாள்.

"ஏய்! என்ன? நான் இன்னும் தொடவே இல்லையே"

"ஒன்றுமில்லை. ஏதோப் பூச்சி."

திரையில் பெரிய புல்வெளியில் அருகருகே நின்று கொண்டிருந்த காதலர்கள் அடுத்த ஷாட்டில் திடீரென்று ஒரு கிலோ மீட்டர் அந்தப் பக்கத்திலிருந்து இரண்டு கைகளையும் விரித்துக் கொண்டு லாங்ட்ரம் பீட்சுக்குத் தக்கபடி ஓடி வந்து நசுங்க, நசுங்கக் கட்டிப் பிடித்துக் கொள்ள...

விக்டோரியா மறுபடியும் நெளிந்தாள்.

"என்ன விக்?"

அவன் காதோரம் சாய்ந்து சொன்னாள், "பின்னால் அமர்ந்திருப்பவன் என் இடுப்பில் கை வைக்கிறான். ரகளை பண்ணாமல் மிரட்டலாகச் சொல், போதும்!"

உடனே சூடான அகஸ்டின் எழுந்து அவன் சீட்டிற்குப் பின்னால் அமர்ந் திருப்பவனை, "கொஞ்சம் மரியாதையாக கையை வைத்துக் கொண்டு இருக்கிறாயா தம்பி?" என்று கத்தி விட...

அவன் எழுந்து கொண்டு, "என்னடா? யாரைப் பார்த்துப் பேசுகிறாய்? நான் யார் வீட்டுப்



பிள்ளை என்று தெரியுமா?" என்று போதை யோடு பதிலுக்குக் கத்த... கூடவே அவனுடைய நண்பர்களும் கத்தினார்கள்.

விக்டோரியா, "அகஸ்டின் வம்பு வேண்டாம். போய் விடலாம்" என்றாள் இரண்டு பேரும் பாதிப் படத்தில் வெளியேறி பைக்கை எடுத்துக் கொண்டு விரைந்தபோது மணி பதினொன்றரை.

திடீரென்று பைக் வெட்டி வெட்டி நின்று போனது ஓரமாக நிறுத்தி இறங்கினான். அதன் ஹெட்லைட் அணைந்ததும் அவர்களை இருள் கவ்வுவதைப் போல வந்துச் சூழ்ந்து கொண்டது.

அகஸ்டின் பைக்கை தனக்குத் தெரிந்த வழியில் எல்லாம் சரி செய்யப் போராடிக் கொண்டிருந்த போது...அவர்களை ஒரு கார் கடந்து சென்றது. கடந்து சென்ற கார் நின்றது ரிவர்ஸில் வந்து அவர்களருகில் நின்றது.

காரில் இருந்து தியேட்டரில் வம்பு செய்த அந்த மூன்று பேர்களும் இறங்கினார்கள் அருகில் வந்தார்கள்.

"என்ன பிரதர், அற்புதமான சரக்கை செலக்ட் செய்யத் தெரிந்திருக்கிறது. நல்ல வண்டியாக வைத்துக் கொள்ளக் கூடாது? சரி, நீ பைக்கை ரிப்பேர் செய்யும் வரைக்கும் பாப்பாவுக்கு போரடிக்காமல் இருக்க நாங்கள் வேடிக்கை காட்டுகிறோம் வா டார்லிங்"

விக்டோரியவின் கையைப் பிடித்து உரிமையோடு இழுத்தான் ஒருவன்.

"டேய்!" கத்தியபடி பாய்ந்த அகஸ்டினை மற்ற இருவரும் தடுத்துக் கீழேத் தள்ளி நெஞ்சில் மிதித்தார்கள். "நீ ஜமாய் ஷியாம்! என்றார்கள்.

அந்த ஷியாம் விக்டோரியா கதறக் கத
அவளைக் காருக்குள் தள்ளி மூர்க்கமாக
பாய்ந்தான். பளார், பளார் என்று மாறி மா
அவள் கன்னங்களில் அறைந்தான் அவளை
செயலிழக்க வைத்து, வலுவிழந்த அவளி
போராட்டங்களுக்கு மத்தியில் விக்டோரியாவை
அனுபவித்தான்.

விக்டோரியாவை இழுத்து வெளியே
தள்ளும் வரைக்கும் துடித்துத் திமிறிக் கொ
டிருந்த அகஸ்டினை மற்ற இரண்டு பேரு
முண்ட முடியாமல் பிடி போட்டு வைத்திரு
தார்கள்.

"என்னடா சொல்கிறார் ஹீரோ! இடுப்பி
லேசாகத் தொட்டதற்கே சிலிர்த்துக் கொ
டாரே! தொடக் கூடாததையெல்லாம் தொட்டா
விட்டதே! என்ன செய்வாணாம் இப்போது? ம்
என்று ஷியாம் தன் பூட்ஸ் காலால் அவ
முகத்தில் ஒரு உதை விட்டு விட்டு, "வாங்கடா
என்றுப் புறப்பட்டான்.

தொய்ந்து போட்ட கீழே விழுந்த அகஸ்டி
பலம் எல்லாம் திரட்டிக் கொண்டு எழுந்
கொள்ளுமுன்பாக அவர்கள் மூவரும் காரிலேறி
போயே விட்டார்கள்.

வெட்டிக் போட்ட வாழையாகக் கிடந்
விக்டோரியாவிடம் ஓடி வந்ததான் அகஸ்டின் த
முகத்தில் அறைந்து கொண்டு அழுதா
அவளுக்குத் தண்ணீர் தெளித்து மயக்க
தெளிவித்தான். ஆர்ப்பாட்டமாக அழுத அவளை
முதுகைத் தடவித் தேற்றினான்.

"விக்டோரியா, நீ உலகத்திலேயே அதிகமா
மதிப்பது ஜீசஸ் ஒருவரைத்தான். ஜீசஸ் பெயரா
எனக்கு ஒரு சத்தியம் செய்துத் தர வேண்டும் நீ



"என்ன அகஸ்டின்?" என்றாள் அழுகை
விறுபடே.

"இங்கே நடந்ததை நீ யாருக்கும் சொல்லக்
கூடாது! இது ஒரு கனவு! இதை சம்பவமாக
மதிக்க நான் தயாராக இல்லை! நீ எதையும்
இழந்து விடவில்லை. உனக்கு எக்காரணம்
கொண்டும் தன்னிரக்கம் ஏற்படக் கூடாது. கறை
பட்டுப் போனவளாக நீ நினைக்கவேக் கூடாது.
உன்னை நான் வெறுக்கவோ, அருவருப்பாகப்
பார்க்கவோத் தயாரில்லை. உனக்கு எதுவுமே
நடந்து விடவில்லை. அதனால் எக்காரணம்
கொண்டும் இதை வெளியே சொல்ல மாட்டேன்
என்றும். இந்த நிகழ்ச்சிக்காக தற்கொலை செய்து
கொள்ள மாட்டேன் என்றும் ஜீசஸ் மேல்
ஆணையிட்டு உன் சிலுவையைத் தொட்டுக்
கொண்டுச் சொல் விக்டோரியா!" என்றான்
அகஸ்டின் தீர்மானமாக.

"எப்படி அகஸ்டின்? எப்படி முடியும்?
மறக்கவோ, மாற்றவோ முடிகிற விஷயமா இது?
ஒரு புனிதமான கன்னியாக என்னை உனக்குத்
தர முடியுமா இனி? சொல்!"

"நீ எதுவும் பேச வேண்டாம். சத்தியம் செய்!"

வற்புறுத்தி அவளை அந்த இடத்திலேயே
தன் டாலரில் தொங்கும் சிலுவையைத் தொட்டு
சத்தியம் செய்ய வைத்தான் அகஸ்டின்.

மறுநாளே அவர்கள் போன காரின் எண்
மற்றும் ஷியாம் என்கிற பெயர் - இவற்றை
வைத்து விசாரித்து, அவர்கள் யார் தினசரி எந்த
ஹோட்டலின் காட்டேஜில் சேர்ந்து மது அருந்து
வார்கள் என்பது வரை அறிந்து கொண்டு நீளமாக

ஒரு கத்தி வாங்கிக் கொண்டு போய் கதவை...
தட்டி...

உள்ளே நுழைந்து கண்மண் தெரியா...
மூன்று பேரையும் மாறி மாறி தூக்கித் தூக்...
குத்திக் குத்திக் குத்திக் குத்திக்...

# 9

"சபாஷ் அகஸ்டின்!" என்றான் ரஞ்சித்...
சொன்னதைக் கேட்க எனக்கு எவ்வளவு சில...
பாக இருக்கிறது தெரியுமா? தன் காதலியின் க...
பழிபோகக் காரணமாக இருந்தவர்களை ஆ...
ரம் தீர கொலையும் செய்து விட்டு அவளுக...
பங்கம் வரக் கூடாது அந்த அசிங்கம் உலகிற்கே...
தெரியக் கூடாதென்று கடைசி வரை பிடிவா...
மாக கொலைகளுக்கான உண்மைக் காரணத்...
மறைத்த உன் உயர்ந்த எண்ணம் எத்தனை...
பேருக்கு வரும்?"

"எவள் பாதிக்கப்பட்டதால் ஏற்பட்...
ஆத்திரத்தில் மூன்று கொலைகளைச் செ...
தேனோ, அந்த விக்டோரியா இன்று உயிருக்கு...
போராடிக் கொண்டிருப்பதைப் பார்க்க என்னா...
சகிக்க முடியவில்லை ரஞ்சித் அவள் கற்புக்காக...
போராடியபோது அதை அவள் இழந்த பிற...
தான் என்னால் ஆறுதல் சொல்ல முடிந்த...
இப்போது உயிர்க்கான போராட்டம் இதில் அவ...
உயிரை இழந்தால் என்னால் தாங்க முடியா...
ரஞ்சித். சொல் ரஞ்சித் எனக்கு உதவுகிறே...
என்றுச் சொல்."

"கொஞ்சம் பதறாமல் இரேன் நான் என்...
இப்போது உதவ முடியாது. வெளியேப் போ...



...என்றும் சொல்லி விட்டேனா? உனக்கு
...வதைப் பற்றித்தானே யோசனை செய்து
...கொண்டிருக்கிறேன் உன் வாழ்க்கையில் ரகசியம்
...இருப்பதைப் போல என் வாழ்க்கையிலும் ரகசியம்
...இருக்கிறது அகஸ்டின் நான் இன்றைக்கு
...நிலையில் உயர்ந்திருக்கிறேன் என்றால் எல்லாம்
...நேர்மையான வழியில் அல்ல! சில பாவங்கள்
...தான் எனக்குப் பணத்தைக் கொட்டுகின்றன.
இப்போது உன்னை கேட்கிற சில கேள்விகளுக்கு
...பதில் சொல் ஏன் எதற்கு என்று நடுவில்
கேட்காதே கடைசியில் என் முடிவைச் சொல்
...றேன்."

அவனைக் குழப்பமாகப் பார்த்த அகஸ்டின்,
"என்ன கேட்கப் போகிறாய்?" என்றான்.

"அகஸ்டின், அந்த மூன்று பேரைக் கொலை
செய்து விட்டு நீ தப்பி ஓடவில்லை சரண
டைந்தாய் சரணடையும் போதே உனக்குத்
தெரியுமல்லவா, நீ செய்த கொடுமையான
கொலைகளுக்கு உனக்கு மரண தண்டனையேக்
கூட வழங்கப் படலாமென்று?"

"தெரியும் ரஞ்சித். என் உயிரேப் போனாலும்
...அவர்களைப் பழி வாங்க வேண்டும் என்று
நினைத்தேன் பழி வாங்கி விட்டேன்."

"ஆக, விக்டோரியாவுக்கு உன் உயிரையும்
கொடுக்க நீ தயார்!"

"நிச்சயமாக ரஞ்சித், அதில் சந்தேகமே
...இல்லை."

"ஒரு பேச்சுக்குக் கேட்கிறேன். இப்போது
...ன் விக்டோரியாவின் உயிரைக் காப்பாற்றுவதற்
...காக ஒரு கொலையே செய்ய வேண்டிய
அவசியம் ஏற்பட்டால் செய்வாயா?"

"நான் ஏற்கனவே மூன்று கொலைகளை
செய்து ஆயுள் தண்டனையை அனுபவிப்பவ
இப்போது தப்பி வேறு வந்திருப்பவன். இந்த
சூழ்நிலையில் மற்றொரு கொலை செய்தால் தா
என் விக்டோரியாவைப் பிழைக்க வைக்க
முடியுமென்றால்... நான் தயங்க மாட்டேன்
எதற்குக் கேட்கிறாய் இப்படி?"

"கல்லூரி நாட்களில் நீ குறி தவறாம
சுடுவதில் எக்ஸ்பர்ட் இல்லையா? அதுவும் மூவி
டார்கெட்டில் கூட சரியாகக் குறி பார்த்து
சுடுவாய். நினைவிருக்கிறதா?"

"இருக்கிறது. அதற்கென்ன?"

"கொஞ்ச நேரம் அமைதியாக இருந்
ரஞ்சித். சரி, இப்போது என் நிபந்தனையை
சொல்லட்டுமா? நான் சொல்கிற ஒரு நபரை
குறி பார்த்துச் சுட்டுக் கொலை செய்ய வேண்
டும். துப்பாக்கி நான் தருகிறேன். ஏற்பாடுகளை
விளக்குகிறேன். இந்தக் கொலையை நீ செய்தா
உனக்கு மூன்று லட்சம் தருகிறேன் அகஸ்டின்
நிபந்தனைக்குத் தயாரா?"

"ஏய்! நீ நிஜமாகத்தான் கேட்டாயா?"

"ஆமாம் மகா சீரியஸாகத்தான் கேட்கிறேன்
நாளைக்கு ஒரு லட்சம் தருகிறேன். போய்
ஆஸ்பத்திரியில் கட்டி ஆபரேஷனுக்கான
ஏற்பாடுகளைச் செய்யச் சொல்! மீதி இரண்டு
லட்சம் எப்போது தர வேண்டும்?"

"இருபத்தி நாலாம் தேதி காலையில்
பனிரெண்டு மணிக்கு ஆபரேஷன் பணம் கட்டிய
பிறகு தான் ஆபரேஷனைத் துவங்குவார்கள்."

"எல்லாம் தோதாகத்தான் அமைந்திருக்
கிறது. இருபத்தி நாலாம் தேதி காலையில்



பதினோரு மணிக்கு நீ அந்தக் கொலையை
செய்ய வேண்டும் அகஸ்டின் என்ன செய்கிறாய்
தானே?"

பதில் பேசாமல் ரஞ்சித்தை உற்றுப்
பார்த்தான் அகஸ்டின் சில நிமிடங்கள் அமைதி
யாக இருந்தான்.

விக்டோரியா எனக்கு உன் உயிர் முக்கியம்
ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். நான்
நீசலிற்கும் மேலே உன்னை நேசிப்பவன். உன்
உயிருக்குப் பிறகுதான் எனக்கு மற்ற உயிர்கள்
எல்லாம்! இன்னொரு உயிரின் அழிவில் தான்
உன் உயிர் மீள வேண்டுமென்றால் அதற்கு என்
சம்மதமே

"செய்கிறேன் ரஞ்சித், சொல், யாரை?"

"யாரை என்றுச் சொன்ன பிறகு நீ பின்
வாங்க மாட்டாயே!"

"இது என் விக்டோரியாவுக்காகச் செய்யும்
கொலை ரஞ்சித்! இந்த நாட்டின் பிரதம
மந்திரியையேக் கொலை செய்யச் சொன்னாலும்,
அதைப் பற்றி எனக்குக் கவலையில்லை,"

புன்னகைத்தான் ரஞ்சித், "சபாஷ்! பிரதம
மந்திரி இல்லை! மந்திரி! ஆச்சார்ய மல்ஹோத்ரா
இருபத்தி நான்காம் தேதி இதே டெல்லியில்
ராஜீவ் காந்தியின் சிலையை காலை பதினோரு
மணிக்குத் திறந்து வைக்கிறார். அவர் கை
சிலையை மூடின திரையை விலக்கும் கயிறின்
முடிச்சை இழுக்கும் போது, உன் கை துப்பாக்கி
யின் ட்ரிக்கரை இழுக்க வேண்டும். அவர் செத்து
விழுந்ததும் ஆஸ்பத்திரியில் என் நபர் இரண்டு
லட்சம் பணம் கட்டுவான். நீ எந்த இடத்தில்
நின்று செயல்பட வேண்டும் என்பதை

நாளைக்கு உன்னை அந்த இடத்திற்கு நேரில் அழைத்துச் சென்று காட்டி விளக்குகிறேன்."

"ஒரு வேளை என் குறி தவறி விட்டால்?"

"கவலையேப்படாதே இரண்டு மாற்று ஏற்பாடுகள் இருக்கின்றன. நானும் என் நண்பன் ஸ்வாதியும் மாறு வேடத்தில் துப்பாக்கிகளோடு வேறு சில மறைவிடங்களில் பதுங்கியிருப்போம். உன்னுடைய முதல் முயற்சி தவறினால் அடுத்து என் கைத்துப்பாக்கி இயங்கும் அதுவும் தவறிச் செய்தால் ஸ்வாதியின் துப்பாக்கியிலிருந்து தோட்டா சீறிச் செல்லும் எப்படியும் அமைச்சரின் சாவு நிச்சயம் கொலை நிச்சயம்."

"சரி, அசந்தர்ப்பமாக ஏதாவது நிகழ்ந்து நான் மாட்டிக் கொண்டால்...?"

"சொல்லேன் நீயே சொல்லேன். குறி தவறாமல் நீ சுட்டு விடுகிறாய் ஆனால் தலை நழுவுவதற்கு முன்பாக பிடிபட்டு விடுகிறாய் என்ன செய்வாய்?"

"என் கழுத்தை அறுத்தாலும் சத்தியமாக உன்னைக் காட்டிக் கொடுக்க மாட்டேன் ரஞ்சித் கற்பழிப்பு நிகழ்ந்ததால் கொலை செய்தேன் என்கிற உண்மையான காரணத்தை எப்படி கடைசிவரை மறைத்தேனோ, அதைப் போலவே 'எனக்கு அந்த அமைச்சரின் கொள்கைகள் பிடிக்கவில்லை, அதனால் சுட்டேன்' என்று சொல்வேன் அதிகபட்சமாக எனக்கு மரண தண்டனைதானே தர முடியும்? எங்கனவே அதை எதிர்பார்த்து சரணடைந்தவன் தானே நான் கவலையில்லை. என் விக்டோரியா பிழைக்க வேண்டும். அது போதும்."

"நீ போலீசில் மாட்டித்தான் தீருவாய் என்று ஏன் நினைக்க வேண்டும் அகஸ்டின்? ஒரு யோசனை சொல்கிறேன். உன்னிடம் ஒரு விஷம் நிரம்பிய கேப்ஸ்யூல் தருகிறேன். சட்டைப் பாக்கெட்டில் பத்திரமாக வைத்துக் கொள். நீ போலீசில் மாட்டாமல் நழுவ முயற்சி செய்! அப்படி அதிகபட்சமாக வேறு வழியின்றி மாட்டிக் கொள்ள நேர்ந்தால், அந்த கேப்ஸ்யூலை விழுங்கி விடு! ஏனென்றால். போலீசின் கொடுமையான விசாரணைகளில் நீ விஷயத்தைக் கக்கி விடுவாயோ என்று நான் டென்ஷனடையத் தேவையில்லை பார்!"

"என் மேல் நம்பிக்கை இல்லையா உனக்கு?"

"அதைவிட உண்மையை சாமர்த்தியமாக வரவழைக்கும் காவல் துறையின் மேல் எனக்கு அதிக நம்பிக்கை என்று வைத்துக் கொள்ளேன். நீ காட்டிக் கொடுக்க மாட்டாய். காட்டிக் கொடுக்க வைக்கப்படலாம் வலுக்கட்டாயமாக!"

"ஓக்கே ரஞ்சித்! உயிருக்கு பயந்தவன் இல்லை நான் என் வார்த்தையை நம்பு! நீ சொல்லும் இடத்திலிருந்து அமைச்சரை சுட்டுவிட்டு நான் சாமர்த்தியமாகத் தப்புவேன். முடியாத பட்சத்தில் போலீசிடம் மாட்டிக் கொள்ளும் சூழ்நிலை ஏற்பட்டால் நீ தரும் விஷம் அடைத்த கேப்ஸ்யூலை விழுங்கத் தயார். அதேப் போல நீயும் சொன்னபடி ஆஸ்பத்திரியில்..."

"சே! நீ உன் உயிரையேப் பணயம் வைக்கும் போது நான் வார்த்தை மாறுவேனா அகஸ்டின்? அமைச்சர் சரிந்ததும் ஆபரேஷன் துவங்கும்! கையைக் கொடு!"

அவன் கையைப் பற்றி அழுத்தமாகக் குலுக்கினான் ரஞ்சித்.

"இரு, என் ஸ்வாதியின் உனக்கு அறிமுகப் படுத்த வேண்டும்" ரஞ்சித் மாடிக்கு வந்து பெட்ரூமின் கதவைத் தட்ட அதைத் திறந்த ஸ்வாதி நல்ல உடையில் இருந்தாள்.

"ரஞ்சித், நீ கில்லாடி! உன் நண்பனோடு நீ பேசிய எல்லாவற்றையும் நான் கேட்டுக் கொண்டுதான் இருந்தேன். வெறும் மூன்று லட்சத்தில் ரிஸ்க் எல்லாவற்றையும் அகஸ்டின் தலையில் சுமத்தி காரியத்தை முடித்து விட்டு முப்பத்தி ஏழு லட்சத்தை நாம் அள்ளிக் கொள்ளப் போகிறோம். முயற்சியில் தப்பு நடந்து அவன் மாட்டினாலும் சயனைடு தின்று செத்துப் போய் விடுவான். அட்டகாசமான திட்டம்!" என்றாள் ஸ்வாதி.

"நமக்குள் அப்புறம் பாராட்டிக் கொள்ள லாம். அவனுக்கு உன்னை என் மனைவி என்று தான் அறிமுகப்படுத்தப் போகிறேன். கொஞ்சம் அடக்கமாக நடந்து கொள்" என்றான் ரஞ்சித்.

"அடக்கம்?" என்னிடத்தில்? அகஸ்டின் ரொம்ப ஸ்மார்ட்டாக இல்லை?" என்றுக் கண்ணடித்தாள் ஸ்வாதி.

"பாவி! அலையாதே! வா" என்று அவளை அழைத்து வந்தான் ரஞ்சித்.

# 10

மறுநாள் காலையில் ரூபா மருத்துவ மனைக்கு அதே சர்தார்ஜி வேடத்தில் வந்தான் அகஸ்டின்.



ரிசப்ஷனில் பேஷண்ட் பெயர் சொல்லி ஆபரேஷனுக்கான முன் பணம் என்று விபரம் சொல்லிக் கட்டி ரசீது வாங்கிக் கொண்ட பிறகு விக்டோரியாவின் அறைக்கு வந்தான்.

அவள் அப்பாவைக் காணவில்லை அவள் படுக்கையில் சாய்ந்து அமர்ந்திருந்தவள் அகஸ்டினைப் பார்த்ததும் புன்னகைத்தாள்.

அவள் அருகில் சென்றமர்ந்தான் அகஸ்டின்.

"வா அகஸ்டின், அப்பா சொன்னார். ஆபரேஷனுக்கு எல்லா ஏற்பாடுகளையும் செய்து விட்டாயமே! யார் அந்த பெரிய மனிதன்?" என்றாள் விக்டோரியா.

"எந்தப் பெரிய மனிதனைக் கேட்கிறாய் விக்?"

"மூன்று லட்சம் உதவி செய்த பெரிய மனிதனைத்தான்"

"இது உதவி இல்லை விக்டோரியா, சம்பளம்!"

"சம்பளமா?"

"ஆமாம் என் வேலைக்கான சம்பளம் நாளைக்கு நான் செய்யப் போகிற ஒரு முக்கிய மான வேலைக்கான சம்பளம் இன்றைக்கு அதற்கு ஒரு லட்சம் அட்வான்ஸ்கூட வாங்கி விட்டேன். ஆஸ்பத்திரியில் கட்டி ஆபரேஷனைக் கூட்டத்திட்ட உறுதி செய்துவிட்டேன். நாளைக்கு எனக்குத் தரப்படுகிற ஒரு வேலையை நான் செய்து முடித்ததும் மீதி இரண்டு லட்சம் என் சார்பில் ஆஸ்பத்திரியில் கட்டி விடுவார்கள்! நிச்சயம் நாளைக்கு உனக்கு ஆபரேஷன் நடக்கிறது. அதில் சந்தேகம் வேண்டாம்."

அவனை நேராகப் பார்த்தாள் விக்டோரியா அவன் பார்வையைத் தவிர்த்தான்.

"அகஸ்டின், மூன்று லட்சம் ரூபாய் சம்பளம் கொடுக்கப்படுமளவிற்கு அப்படி என்ன வேலை அது?"

"என்னை எந்த விபரமும் கேட்காதே!"

"என் முகத்தைப் பார்த்துச் சொல் அகஸ்டின் ஒரே நாளில் அந்த வேலையைச் செய்து முடித்து விடுவாயா? அதற்கு மூன்று லட்சமா? என்ன சொல்கிறாய் நீ?"

"உனக்கென்ன அதைப்பற்றி? விட்டேன் ஆமாம், ஒரு பெரிய மனிதன் இனாமாகக் கொடுக்கிறான் என்றுப் பொய் சொல்லியிருக்க வேண்டும் நான்"

"பாதி உண்மையைச் சொன்ன நீ மீதி உண்மையையும் சொல்லிவிடு அகஸ்டின் மூன்று லட்சம் தரப்படுமளவிற்கு என்ன செய்யப் போகிறாய்? அதுவும் நீ இப்போது ஒரு தப்பி வந்து தலைமறைவாகத் திரிந்து கொண்டிருக்கும் கைதி நீ! அன்றைக்கு நீ வந்து போனதும் போலீஸ் வந்து விசாரித்தது தெரியுமா? நீ இங்கே வரவே இல்லை என்று நானும் அப்பாவும் சாதித்தோம். நீ மறுபடி இங்கே வந்தால் போன் செய்யச் சொல்லி நம்பர்கூட கொடுத்து சென் றிருக்கிறார்."

"சரி நாளைக்கு நீ என்னச் செய்யப் போகிறாய். அதைச் சொல்!"

"என் சுற்றிச் சுற்றி அங்கேயே வருகிறாய்?"

"நீ செய்யப் போகிற காரியம் நியாயமானதா, இல்லையா?"



"என் விக்டோரியா உயிர் வாழ வேண்டும் அது ஒன்றுதான் என் குறிக்கோள் அதற்காக எதை வேண்டுமானாலும் செய்வேன்."

"எதை வேண்டுமானாலும்?"

"யெஸ் எதை வேண்டுமானாலும்!"

"ஒரு ஆளைக் கொலை செய் என்று சொன்னால் கூடச் செய்வாயா?"

அந்தக் கேள்வியில் அதிர்ந்து போனான் அகஸ்டின் ஆனால் சுதாரித்துக் கொண்டு, "அந்த மாதிரி எல்லாம் யாரும் எனக்குச் சொல்லவும் இல்லை. நானும் செய்வதாக இல்லை. ஒரு பேச்சுக்காகக் கேட்கிறேன். அப்படியே ஒரு சந்தர்ப்பம் அமைந்தாலும் கொலை எனக்குப் புதிதா விக்டோரியா? இல்லை மரண தண்ட னைக்குத்தான் நான் பயப்படுகிறவனா?"

"ஏற்கனவே நீ செய்த கொலைகளில் எனக்குச் சம்மதமா அகஸ்டின்? நீ அவர்களை மட்டுமா தண்டித்தாய்? உன்னையே தண்டித்துக் கொண்டாய்! உன்னை தண்டித்துக் கொண்ட தால் என்னையும் சேர்த்துதான் தண்டித்தாய்! ஆயுள் கைதியாய் என் காதலன் இருப்பதும் இப்படி தப்பித்து வந்து என்னோடு பேசிக் கொண்டிருப்பதும் எனக்கு சந்தோஷமானதா அகஸ்டின் - இதோ பார்! அநியாயமான வழியில் இந்தப் பணம் வந்தது என்றால் எனக்கு ஆபரேஷனே வேண்டாம்!"

"உளறாமல் பேசாமல் இரு விக்டோரியா! ஒரு பெரிய பணக்காரனே மூன்று லட்சத்தை டொனேட் செய்கிறான் என்று வை! அது கள்ளப் பணமா இல்லை வரி கட்டின கணக்கில் உள்ள பணமா என்றெல்லாம் ஆராய்ச்சி நடத்துவாயா?

ரோட்டில் நான் அடிபட்டு கிடக்கிறேன் என்று வைத்துக் கொள். என்னை உடனடியாக ஆஸ்பத்திரியில் சேர்த்தாக வேண்டும் அந்த சமயத்தில் ஒரு பெண் காரில் வருகிறாள் ஏற்றிச் செல்லவும் சம்மதிக்கிறாள். ஆனால் அவள் தன் உடம்பை பணத்துக்காக விற்பவள் என்று உனக்குத் தெரியும் தாமதிக்கிற நேரம் என் உயிருக்கு ஆபத்து! இந்தச் சூழ்நிலையில் நீ என்ன முடிவெடுப்பாய்?"

"இதென்ன கேள்வி உட்கார்ந்து யோசிக்க அவகாசமில்லாதச் சூழ்நிலை அது! அப்போது என் கொள்கைளைவிட உன்னைக் காப்பாற்ற வேண்டியதுதான் எனக்கு முக்கியம் அதனால் நிச்சயம் அந்தக் காரில் உன்னை ஏற்றிச் செல்வேன் அகஸ்டின் ஆபத்துக்குப் பாவ மில்லை!"

அவன் கண்கள் பிரகாசமாகின, ஒப்புக் கொள்கிறாய்தானே? அதே தான் என் நிலையும் ஆபத்துக்குப் பாவமில்லை என்றுதான் அந்த வேலையை நான் செய்யப் போகிறேன். ஒரு சில நிமிடங்கள் தான் வேலை பதினோரு மணிக் கெல்லாம் என் வேலை துவங்கி உடனே முடிந்துவிடும் ஆபரேஷன் முடிந்ததும் உன்னை வந்து பார்ப்பேன்" என்றான்.

"ஆக கடைசி வரைக்கும் நாளைக்கு நீ என்ன செய்யப் போகிறாய் என்று சொல்ல மாட்டாய்தானே?"

"ம்கூம்"

"ஆனால் அதற்கு முன்னால் நீ ஜெயிலுக் குள் இருப்பாயே அகஸ்டின்?" என்று மூன்றாவது ஆண்குரல் கேட்டுத் திரும்பிப் பார்க்க கையில்



ரிவால்வாருடன் நின்று கொண்டிருந்தார் அந்தப் போலீஸ் இன்ஸ்பெக்டர்.

அதிர்ந்து போனான் அகஸ்டின்.

"தப்பி ஓடிய கைதி தன் காதலியைத் தேடி வருவான் என்கிற அடிப்படை விதிகூட தெரியாத மக்குகளாக எங்களை நீ நினைத்துக் கொண்டால் அது தப்பு அகஸ்டின் அன்றைக்கே நீ சிக்கியிருக்க வேண்டும். சில நிமிட இடைவெளியில் கோட்டை விட்டு விட்டேன். கையைக் கொஞ்ச நீட்டுகிறாயா, விலங்கு மாட்ட வேண்டும்!"

"ப்ளீஸ் சார்! சத்தியமாக நாளைக்கு நாளே வந்து சரண்டர் ஆகிறேன். இப்போது நாள் போயாக வேண்டும் நாளைக்கு விக்டோரியாவில் ஆபரேஷனுக்குப் பணம் வந்தாக வேண்டு அதற்காக நான்...." பேசிக் கொண்டே திடீரென்று தரையில் உருண்டு காலை உயர்த்தி அவ கையில் இருந்த ரிவால்வரைத் தட்டிவிட்டான்

இன்ஸ்பெக்டர் தடுமாறி சுதாரிப்பதற்குள் கீழே விழுந்த ரிவால்வரைத் தாவி எடுத்து அவரை நோக்கி நிமிர்த்தினான்.

"ஹேண்ட்ஸ் அப்! ஒரே ஒருநாள் பொறுத்துக் கொள்ளுங்கள் நாளைக்கு நாமே சரண்டாகிறேன் ஸாரி! உங்களை மிரட்டுவதற்கு ஸாரி!" என்றவன் அவள் பக்கம் திரும்பினான் "விக்டோரியா தைரியமாக இரு! நாளைக்கு உனக்கு ஆபரேஷன் வெற்றிகரமாக நடக்கு உன் சிரித்த முகத்தை வந்து பார்த்துவிட்டு பின்னர்தான் சரணடைவேன் - வேண்டுமானா இந்த இன்ஸ்பெக்டரை இங்கேயே எனக்கா நாளை வரைக் காத்திருக்கச் சொல்! ஆல் த பெஸ்ட் விக்டோரியா"

அவரை நோக்கி துப்பாக்கியை நிமிர்த்திப் பிடித்த படியே பின்புறமாக நடந்து அறையின் கதவைத் திறந்து சட்டென்று வெளியேறி கதவை மூடி விட்டு ஓடத் துவங்கினான்.

## 11

சார்லஸ் கோபமாகத் தலையை மறுப்பாக அசைத்தான் "முட்டாள்தனம்! சுத்த முட்டாள் தனம் இது! கத்தினான்.

அவனைக் கையமர்த்தினான் ரஞ்சித். "இப்போது என்ன நடந்து விட்ட தென்று குதிக்கிறாய் இப்படி சார்லஸ்?"

"அமைச்சரைக் கொல்வதென்பது எவ்வளவு ரகசியமான பெரிய வேலை!"

"ஆமாம்! அதற்கென்ன?"

"நான் நம்பிக்கைக்குரியவன் என்பதால் தானே உன்னிடம் அந்தப் பொறுப்பை ஒப் படைத்தேன். நீ அர்த்தமில்லாமல் ஒரு தப்பி வந்த கைதியிடம் பொறுப்பை ஒப்படைத்திருக் கிறாயே!"

"அதனால் என்ன? நான் உனக்கு நம்பக மானவன் என்று எப்படி நினைக்கிறாயோ. அந்த மாதிரி தான் அவனும் எனக்கு நம்பகமானவன்."

"அவன் ஒப்புக் கொண்டபடி செய்வான் என்று என்ன நிச்சயம்?"

"செய்தாக வேண்டும் சார்லஸ். அவனுக்கு வேறு வழியில்லை அவன் சுட்டாக வேண்டும் அமைச்சர் இறந்தாக வேண்டும் . அப்போதுதான் அவனது காதலியின் ஆபரேஷனுக்கான பணம் கட்டப்படும் பணம் கட்டப்பட்டால்தான் ஆப



ரேஷன் நடக்கும். ஆபரேஷன் நடந்தால்தான் விக்டோரியா உயிரோடு வாழமுடியும் விக்டோரியா உயிரோடு வாழ வேண்டியது அகஸ்டினுக்கு உலக மகா முக்கியம்! அதனால் அவன் ஒப்புக் கொண்டிருக்கிறான்."

"சரி குறி தப்பினால்?"

"சான்சே இல்லை விழா நடக்கும் இடத்திற்கு அருகில் ஒரு பூங்கா பூங்காவில் நிறைய மரங்கள் அடர்த்தியாக கிளைவிட்டு இலை பரப்பின பெரிய மரங்கள் அந்த மரங் களுக்குள் நூறுபேர் மறைந்து உட்கார்ந்திருந்தால் கூட வெளியேத் தெரியாது அதில் சிலை மேடையைக் குறி பார்க்கத் தோதான ஒரு மரத்தை நான் தேர்வு செய்துவிட்டேன். இன்றைக்கு நள்ளிரவிலேயே அகஸ்டின் ஆயுதத்தோடு அந்த மரத்தில் ஏறி அதன் அடர்ந்த கிளைகளில் பதுங்கிக் கொண்டு காத்திருக்கப் போகிறான். ஓரளவுக்கு க்ளோஸ் ரேஞ்ச் கிடைக்கிறது சார்லஸ் கல்லூரியில் துப்பாக்கி சுடும் போட்டியில் பரிசுகள் வாங்கி யவன் அவன் நிஜமாகத்தான சொல்கிறேன். என்னைவிட எக்ஸ்பர்ட்! அவன் குறி தப்பப் போவதில்லை."

"சரி ரஞ்சித் நம்பலாம். எல்லாம் நல்ல படியாக நடக்கும் என்றே நம்பலாம் ஒருவேளை குறி தவறிவிட்டால்?"

"கவலையே வேண்டாம் அவனுக்கு மரத்தை தேர்வு செய்திருப்பது போல எனக்கு மற்றொரு மறைவான இடம் தேர்ந்தெடுத்து வைத்துள்ளேன் அவன் சுட்ட குண்டு குறி தப்பினால் உடனே என் துப்பாக்கி இயங்கும் என் குறியும் தப்பினால் மற்றொரு இடத்திலிருந்து ஸ்வாதி சுடுவாள்."

"எப்படியோ அமைச்சர் இறந்துவிடுவார்?"

"அது நிச்சயம்"

"பிடித்தால் என்ன?"

"பிடித்தால் என்னவா? அவனிடமிருந்து ஏவி விட்டவர் யார் என்றுக் கேள்வி கேட்டு பதில் பெறுவது போலீசுக்கு ஒன்றும் பெரிய விஷய மில்லை ரஞ்சித்.

ரஞ்சித் சிரித்து என் சார்லஸ், எனக்கு மட்டும் என்னைப் பற்றிய பயமிருக்காதா? போலீஸ் அவனைப் பிடிக்க வந்தால் அவனைப் பிடிக்க முடியாது அவன் பிணத்தைத்தான் பிடிக்க முடியும்."

"அப்படியென்றால்?"

"நான் கொடுக்கிற சயனைட் கேப்சூலை அவன் சாப்பிட்டு விடுவான்."

"அதற்கு அவன்..."

"முழு மனதுடன் சம்மதித்துவிட்டான். அவனுக்குத் தன்னுயிரைப் பற்றி கவலை யில்லை. தன் காதலிதான் அவன் இலட்சியம்."

"சரி, குறி தவறாமல் சுட்டு விடுகிறான் அதன் பிறகு அவனுக்கு என்ன உன் இன்ஸ்ட் ரக்ஷன்?"

"சாமர்த்தியமாகத் தப்பிவிடு என்பதுதான்."

"தப்பி என்ன செயவான்?"

"இது என்ன கேள்வி? எங்காவது தலை மறைவாகப் போவான்."

"எத்தனை நாளைக்கு அவன் தலைமறை வாக இருக்க முடியும் ரஞ்சித்? அவன் ஒரு தப்பி வந்த ஆயுள் கைதி என்பதை மறந்துவிடாதே! அமைச்சரின் கொலையோடு அவனை சம்பந்தப்



படுத்தவில்லை என்றாலும் போலீஸ் அவனைத் தேடிக் கொண்டுதானே இருக்கும்?"

"ஆமாம்"

"என்றாவது ஒருநாள் கண்டுபிடிக்கத்தானே செய்யும்?"

"ஆமாம்"

"அப்போது இத்தனை நாள் என்ன செய்தாய் என்று விசாரிக்கத் தானே செய்யும்? உன் காதலியின் ஆபரேஷனுக்கு மூன்று லட்சம் கொடுத்தது யார் என்று அவன் மர்ம ஸ்தானத்தைப் பிசைந்து கேள்வி கேட்கத்தானே செய்யும்?"

"ஆமாம்"

"வலி தாங்காமல் அப்போது அவன் காட்டிக் கொடுக்க சாத்திய முண்டா இல்லையா?"

தயங்கி, "உண்டு" என்றான் ரஞ்சித்.

"அதனால், என் வார்த்தையைக் கேள்! நாளைக்கு அமைச்சரை அவன் சுடப் போகிறான். அந்த முயற்சியில் அவன் ஜெயித்தாலும் தோற்றாலும் உயிரோடு உலாவது நமக்கு நல்லதில்லை. தன் முயற்சியில் தோற்றுப் போலீசில் பிடிபட்டால் அவனாகத் தற்கொலை செய்து கொள்வான் தோற்று ஆனால் போலீசில் பிடிபடாமல் தப்பலாம் ஜெயித்தும் தப்பலாம் அப்படித் தப்பி வந்தால் நீ அவனைத் தீர்த்து விடு!"

ரஞ்சித் சார்லசை உணர்ச்சியில்லாமல் பார்த்தான்.

"நண்பன் என்கிற இரக்கம் எல்லாம் வேண்டாம் அவனோ ஒரு ஆயுள் கைதி. ஏற்கனவே மரண தண்டனைக்குத் தப்பியவன்.

இப்போதும் சாவுக்கு பயப்படாதவன் சயனைட் கேப்ஸூல் சாப்பிடத் தயாராக இருப்பவன் அவனைக் கொலை செய்வதில் தப்பில்லை."

"சார்லஸ் 'அவன் பாவமாயிற்றே அவனைக் கொல்வதா' என்று நான் யோசிக்கவில்லை. எங்கே வைத்து எப்படிக் கொலை செய்யலாம் என்று நான் இப்போது நான் யோசித்துக் கொண்டிருக்கிறேன். அந்தக் கொலையையும் சாமர்த்தியமாக நம் கவடு தெரியாமல் செய்தாக வேண்டுமில்லையா?"

"அது உன் சாமர்த்தியம் யோசனையை நான் சொல்லிவிட்டேன். செயல் உன் ஏரியா!" என்றான் சார்லஸ்.

"அப்படித்தானே எப்போதும் நடக்கிறது!" என்று பெருமூச்சுடன் எழுந்துகொண்டான் ரஞ்சித்.

## 12

ரஞ்சித் தன் வீட்டிற்குத் திரும்பிய போது சோபாவில் அமர்ந்து டீ குடித்துக் கொண்டிருந்த அகஸ்டினின் சிகரெட்டிற்கு லைட்டரைக் கிளிக்கி நெருப்புக் காட்டிக் கொண்டிருந்தாள் ஸ்வாதி.

வந்து உட்கார்ந்த ரஞ்சித் டீப்பாய் மேல் இருந்த ஒரு புதிய ரிவால்வரைப் பார்த்து, "அகஸ்டின் என்ன இது! நான் இன்னும் உனக்கு துப்பாக்கி தரவே இல்லையே?" என்றான்

"இது ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டருடைய துப்பாக்கி ரஞ்சித்!"

"என்ன சொல்கிறாய்?"



"ஒரு லட்சம் பணம் கட்டிவிட்டு விக்டோரியாவைப் பார்த்துப் பேசி விட்டு வர நான் சென்றேனா, அங்கே என்னை எதிர்பார்த்து ரகசியமாக கண்காணித்துக் கொண்டிருந்த ஒரு இன்ஸ்பெக்டர் துப்பாக்கி முனையில் என்னை மடக்கிவிட்டார்."

"மைகாட்! பிறகு"

"நான் அவரின் கவனத்தை திசைத் திருப்பி துப்பாக்கியைக் காலால் தட்டி, நான் கவர்ந்து கொண்டு தப்பி வந்துவிட்டேன்"

"உன்னை யாரும் ஃபாலோ செய்ய வில்லையா?"

"நான் பல இடங்களில் போக்குக் காட்டி தான் வந்தேன். யாரும் துரத்தி வரவில்லை."

"நீ ஒரு கொலை செய்யப் போவது விக்டோரியாவுக்குத் தெரியுமா?"

"தெரியாது சொன்னால் தன் ஆபரேஷ னுக்கே சம்மதிக்க மாட்டாள். அதனால் மறைத்து விட்டேன்."

"அப்புறம் அகஸ்டின் உன்னிடம் ஒரு விஷயம் கேட்க விடுபட்டு விட்டது. அமைச்சரைத் தீர்த்துக் கட்டிவிட்டு, பரபரப்பு காட்டாமல நைஸாக நழுவி தப்பிக்கிறாய் அடுத்து உன் செயல் என்ன?"

"இரவு வரை இங்கே இருந்துவிட்டுப் பிறகு ஆஸ்பத்திரிக்குச் சென்று ஆபரேஷன் செய்யப் பட்ட விக்டோரியாவைப் பார்த்து அவள் நெற்றி யில் முத்தமிட வேண்டும். 'உன் கர்ப்பத்தை என்னால் காக்க முடியவில்லை, ஆனால் உன் உயிரைக் காப்பாற்றி விட்டேன் பார்' என்று சொல்ல வேண்டும்."

"அதன் பிறகு?"

"அதன் பிறகென்ன? போலீசில் சரண டைந்து விடுவேன் என விக்டோரியாவை எந்த விதத்திலாவது காப்பாற்ற வேண்டுமென்பதற் காக ஜெயிலில் இருந்து தப்பித்து வந்தேன். அந்தக் காரியம் முடிந்தபின் நான் மறுபடி ஜெயிலுக்குப் போவதுதானே சரி?"

"ஏன், இந்தியாவில் ஒளிந்து கொள்ள இடங்களா இல்லை. ஏதோ ஒரு தூரமான ஊரில் தலைமறைவாக இருக்கலாமே!"

"அதில் எனக்கு விருப்பமில்லை. ஜெயிலில் என் தண்டனைக் காலம் எல்லாம் முடிந்து என்றாவது ஒருநாள் நான் என் விக்டோரியா வுடன் சந்தோஷமாக வாழ்க்கை நடத்துவேன். அந்த வாய்ப்பு எத்தனை வருடங்கள் கழித்து கிடைத்தாலும் சரி!"

"சரி, நீயாக சரண்டராகும் போது என் தப்பினாய், காதலியின் ஆபரேனுக்கான பணத்தை எப்படி ஏற்பாடு செய்தாய் என்றெல் லாம் கேட்டால் என்ன பதில் சொல்வாய்?"

"பண ஏற்பாடு அவளின் அப்பா செய்தார் என்றுதான் சொல்வேன்."

"வெரிகுட். நீ போய் ஓய்வெடு அகஸ்டின். ராத்திரி இரண்டு மணிக்கு உன்னை நான் எழுப்புகிறேன் நான் காலையில் காட்டின அந்த மரத்தில் நீ ஏறி செட்டிலானதும் நான் திரும்பி வந்து விடுகிறேன்."

"அது சரி, எனக்கு மரத்தை தேர்ந்தெடுத்தாய். எந்த இடத்தில் பதுங்கியிருப்பாய்? ஸ்வாதி பதுங்கியிருக்கும் இடம் எது? அதையெல்லாம் சொல்லவே இல்லையே நீ?"

"அது உனக்குக்கூட தெரியாமல் இருக் கட்டும் என்று நினைக்கிறேன். காரணமாகத்தான்



சொல்கிறேன். இந்தத்திட்டத்தில் நீ எத்த னையோக் கேள்விகள் கேட்காமல் இறங்க வில்லையா?"

"சரி" தோள்களைக குலுக்கிக் கொண்டு எழுந்து கீழே இருந்த அவனுக்காக ஒதுக்கப் பட்டிருந்த அறைக்குள் சென்றான் அகஸ்டின்.

ரஞ்சித்தும், ஸ்வாதியும் மாடியறைக்கு வந்தார்கள்.

"ஸ்வாதி, நாளைக்கு அகஸ்டின் போலீசிடம் மாட்டும் சூழ்நிலை ஏற்பட்டால் அவனே தற்கொலை செய்து கொள்வான். வெற்றியாகத் தப்பி வந்தாலும் சரி, தோல்வியாகத் தப்பி வந்தாலும் சரி, அவனைக் கொன்று விடு என்கிறான் சார்லஸ்."

"அய்யோ!" என்றாள் ஸ்வாதி

"சார்லஸ் சொல்வதில் அர்த்தம் இருக்கிறது ஸ்வாதி. அங்கிருந்து நழுவி அகஸ்டின் நம் வீட்டிற்கு வருவதாகத்தான் சொல்லியிருக் கிறான். இருட்டிய பிறகுதான் ஆஸ்பத்திரி செல்லப் போகிறான், அவன் இங்கே வந்ததும் அவனுக்குத் தரும் விஸ்கியில் விஷம் கலந்து தரப்போகிறேன். பிறகு பாடியை டிஸ்போஸ் செய்ய வேறு திட்டம் வைத்திருக்கிறேன்" என்றான் ரஞ்சித்

## 13

இரவு மணி 2.30

வெகுவெகு தூரத்திலேயேத் தன் காரை நிறுத்தினான் ரஞ்சித் ரஞ்சித்தும் அகஸ்டினும் இறங்கிக் கொண்டார்கள் நிழலாக நடந்தார்கள்.

அந்தப் பூங்காவின் வேறு ஒரு மூலையில் காம்பௌண்ட் ஏறி உள்ளேக் குதித்து பூங்காவுக்குள் இருட்டுத் தீவுகளாய் பார்த்து நடந்து காலையில் தேர்ந்தெடுத்த அந்த மரத்திற்குக் கீழே வந்து நின்றார்கள்.

அகஸ்டின் தன் பேண்ட் பாக்கெட்டில் ரஞ்சித் கொடுத்த ரிவால் வரைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான் இப்போது வேறு ஒரு மாறுவேடம்!

"மறந்து விடாதே! அமைச்சர் திரையை விலக்க முடிச்சை இழுப்பார் அதுதான் நீ செயல்படுவதற்கான சிக்னல்! ஆல் தி பெஸ்ட்!" என்று சன்னக் குரலில் பேசி கை குலுக்கினான்.

அகஸ்டின் ஓசை ஏற்படுத்தாமல் மெதுவாக மரத்தில் ஏறி அதன் அடர்த்தியான கிளைகளுக்கு நடுவில் காணாமல் போனதும், ரஞ்சித் வந்த வழியில் பூங்காவுக்குள் நடந்து, ஏறிக் குதித்த இடத்திலேயே மறுபடி ஏறிக் குதித்து நடந்து தன் காரை எடுத்துக் கொண்டு சென்றான்.

ஒரு வாகான கனமான கிளையில் கிட்டத் தட்ட குப்புறப் படுத்துக் கொண்டு பார்த்தான் அகஸ்டின்.

கொஞ்சம் தள்ளி அந்த இரண்டு மேடைகளும் இலைகளினூடேத் தெரிந்தது. ஒன்று சிலை திறந்ததும் பேசும் பெரிய மேடை மற்றது சிலையைச் சுற்றிலும் அமைக்கப்பட்டிருந்த பதினொன்று படிகளுடன் கூடிய சின்ன மேடை.

மேடைகளில் பூ அலங்கார வேலைகள் நடந்து கொண்டிருந்தன அரசாங்க ஜீப்கள் நின்றிருந்தன. அதிகாரிகள் மேற்பார்வையிட்டு உத்தரவுகள் பிறப்பித்துக் கொண்டிருந்தனர்.



சாலையில் ஓரத்தில் பொது மக்கள் எல்லை மீறாமல் நிற்பதற்காக சவுக்குக் கம்பங்களைக் கொண்டு தற்காலிக வேலி அமைத்துக் கொண்டிருந்தார்கள்.

சிலை இப்போதே மஞ்சள் நிறப் பட்டுத் துணியால் மூடி வைக்கப்பட்டிருந்தது ஒரு அதிகாரி அந்தப் படிகளின் மேல் தன் உடம்பின் முழு அழுத்தத் தையும் கொடுத்து ஏறிப் பார்த்தார் பலகைகளின் கனத்தைச் சோதித்து, திருப்தி வந்த பிறகு, அந்தப் படிகளின் மேல் சிகப்பு கார்ப்பெட்டப் போட்டு மூடச் சொன்னார்.

கிட்டத்தட்ட நூறு ஜனங்கள் ஜோராக வேலைகளைப் பார்த்துக் கொண்ருக்க, அகஸ்டினுக்கு சிரிப்பு வந்தது.

இத்தனை ஏற்பாடுகளும் எதற்காக? சிலை திறப்புக்கா? இல்லை அமைச்சரின் இறப்புக்கா; கூடிய சீக்கிரம் அமைச்சர் ஆச்சார்ய மல்ஹோத் ராவின் சிலையை மற்றொரு முச்சந்தியி வைக்கப் போகிறார்கள்.

தன் மரக்கிளை இருப்பிடத்திலிருந்து சிலை மேடையில் நிற்பவரின் தலையை ரொம்ப சுலபமாகச் சுட முடியும் என்று தான் பட்டது.

காலை பதினொரு மணிக்கு இப்பே திருந்தே காத்திருக்கத் துவங்கினான் அகஸ்டின்

காலை மணி 10.45

அந்த இடத்தில் பொதுமக்கள் நான் சாலைகளின் கட்டுப்படுத்தப்பட்ட விளிம் களிலும் அலைமோதினார்கள். மேடைக்கெதிரி போடப்பட்டிருந்த நாற்காலிகளில் பெரி அதிகாரிகள் ஒரு பக்கம், பத்திரிகை நிருபர்க ஒரு பக்கம் அமர்ந்திருந்தார்கள்.

சிலையை மூடிய பட்டுத் துணி காற்றில் படபடத்தது நிறைய போட்டோ கிராபர்கள் சும்மா இருக்கும் நேரத்திற்கு பொதுமக்களைப் படம் பிடித்துக் கொண்டிருந்தார்கள். வீடியோ கேமிராக்கள் ஸ்டாண்டில் நின்றுக் காத்திருந்தன.

பத்தடிக்கு ஒரு போலீஸ்காரர் கையில் தடியோடு நின்று கொண்டிருந்தார்.

மரத்தின் கிளையின் மேல் உடும்பு போல ஒட்டிக் கொண்டு படுத்திருந்த அகஸ்டின் டென்ஷனோடுக் காத்திருந்தான்.

10.55-க்கு அமைச்சர் ஆச்சார்ய மல்ஹோத்ராவின் பைலட் ஜீப்கள் முதலில் வந்தன. தொடர்ந்து இரண்டு கார்கள். அதன் பிறகு அமைச்சரின்கார்.

பிரமுகர்கள் எழுந்து கொண்டார்கள். ஸ்பீக்கர்களில் இசை முழங்கியது. காரை விட்டு அமைச்சர் இறங்கினார். அவருக்கு முன்னாலும், பின்னாலும் ஏ.கே. 47 ஏந்திய பாதுகாப்பு வீரர்கள் நாலாத் திசையிலும் பார்த்தபடி நடந்தார்கள்.

சிலை திறப்பு விழா கமிட்டி தலைவர் அமைச்சருக்கு ஒரு பொன்னாடைப் போர்த்தி, கையில் பூச்செண்டளித்து வரவேற்றார்.

அமைச்சர் பொதுமக்கள் திசையில் திரும்பி உற்சாகமாகக் கையசைத்து விட்டு சிலையை நோக்கி நடந்தார். அவர் நடந்த வழியின் இருபுறமும் ஒரே மாதிரி உடுத்த வைத்து நிறுத்தப் பட்டிருந்த பள்ளிப் பெண்கள் மலர் தூவினார்கள்.

சிலர் நீட்டிய மலர் மாலைகளைப் பெற்று தன் உதவியாளரிடம் தந்தபடி சிலை இருந்த சின்ன மேடையை நோக்கி முன்னேறினார் அமைச்சர் ஆச்சார்ய மல்ஹோத்ரா



அவர் சென்ற இடமெல்லாம் வீடியோ கேமிராக்கள் தொடர்ந்து கொண்டிருக்க...

பொது மக்கள் கூட்டத்தோடு தானும் ஒரு பொது ஜனமாய் அப்பாவியாய் மாறுவேடமிட்டு நின்று கொண்டிருந்தான் ரஞ்சித் அவனருகில் ஒரு ராஜஸ்தானிய மனைவி போல உடுத்தி நின்றிருந்தாள் ஸ்வாதி.

ரஞ்சித்தின் பார்வை தூரத்தில் இருந்த அந்த மரத்தின் மீதும் மாறி மாறி தாவி கொண்டிருந்தது.

அமைச்சர் சிலை மேடையின் பதினான்கு மரப்படிகளில் முதல் படியில் கால் வைத்து ஏறினார் ஏறினார். பதினாலாவது படியை ஏறி மேடைக்கு வந்து நின்றார்.

அவர் சிலையைத் திறந்தவுடன் தட்டு வதற்குத் தயாராய் எல்லோரும் கைகளை வைத்துக் கெண்டிருக்க... அமைச்சர் புன் சிரிப்போடு மிட்டி தலைவரைப் பார்த்து சிலையைத் திறக்கட்டுமா என்று சைகையில் கேட்டு விட்டு, சிலையை மறைத்துத் தொங்கிய துணியின் முடிச்சைத் தொட்டு...

இ...

மூ...

த்...

தா...

ர்...!

அடுத்த விநாடி அவரின் கழுத்துப் பகுதியிலிருந்து ரத்தம் பீறிட்டுச் சிதற... அப்படியே சரிந்தார்!

பரபரபரபரபரபரபரப்பு! எல்லோரும் எல்லா திசைகளிலும் ஓடத் துவங்கினார்கள்! புகை

கைத்த ரஞ்சித் ஸ்வாதியின் கையைப் பற்றிக் குலுக்கினான், "சொன்னேனில்லையா? அவன் குறி தப்பவில்லை பார்! நமக்கு வேலை இல்லாமல் செய்து விட்டான், வா! பேசியபடி ஆஸ்பத்திரி சென்று பணம் கட்டி விட்டு வீட்டுக்குப் போகலாம். வீட்டில் மற்றொரு வேலை பாக்கியிருக்கிறது" என்றான்.

ஆஸ்பத்திரியில் பணத்தைக் கட்டிவிட்டு வீட்டிற்கு ரஞ்சித்தும், ஸ்வாதியும் திரும்பிய போது, ஏற்கனவே வந்து ரொம்ப கூலாக செய்தித்தாள் படித்துக் கொண்டிருந்தான் அகஸ்டின்.

ரஞ்சித் அவன் கையைப் பற்றிக் குலுக்கோ குலுக்கென்று குலுக்கினான்.

"பிரமாதம் அகஸ்டின் இந்த வெற்றி நான் எதிர்பார்த்ததுதான் நீ ஜெயிப்பாய் என்று எனக்குத் தெரியும் அதனால் உனக்குத் தர நான் கேக் வாங்கித் தயாராய் வைத்திருக்கிறேன்."

ரஞ்சித் ரெஃப்ரிஜிரேட்டர் திறந்து கேக் பெட்டியை எடுத்து அகஸ்டினிடம் கொடுத்தான்.

அதை வாங்கிக் கொண்டு அவன், "அகஸ்டின் இந்தக் கேக்கில் என்ன விஷத்தைக் கலந்திருக்கிறாய் ரஞ்சித்?" என்றான்

ரஞ்சித் பதட்டமாய் விழிக்க...

"சரி என்னிடம் சொல்லாவிட்டால் அவர்களிடமாவது பதில் சொல்!" வாசலை நோக்கி அகஸ்டின் கை நீட்ட, கிட்டத்தட்ட ஒம்பது போலீஸ் கார்கள் ஜீப்களில் இருந்து இறங்கிக் கொண்டிருக்க...

கமிஷனர் மற்றும் சில அதிகாரிகள் கைகளில துப்பாக்கிகளுடன் உள்ளே வந்து கொண்டிருந்தார்கள்.



"என்ன ரஞ்சித், விழிக்கிறாய்? நேற்று என்னை ஓய்வெடுக்கச் சொன்னாயல்லவா? அதன் பின் இன்ஸ்பெக்டரிடம் இருந்து நான் எடுத்து வந்த துப்பாக்கியை என்ன செய்யலாம் என்று கேட்பதற்காக நான் மாடிக்கு வந்தேன். அப்போது நீ ஸ்வாதியிடம் எல்லாம் முடிந்ததும் என்னை விஷம் வைத்துக் கொல்லப் போவதாக நீ சொல்லிக் கொண்டிருந்ததைக் கேட்டதும் மனம் வெறுத்தேன்."

"ஆனாலும் நான் அமைச்சரைக் கொலை செய்யாவிட்டால் விக்டோரியாவின் ஆபரேஷனுக்குப் பணம் கிடைக்காது என்பதால் அரை மனதோடு நேற்று மரத்தில் பதுங்கினேன் நீ. என்னை விட்டுப் போனதும் எனக்குக் கிடைத்தத் தனிமையில் நான் யோசித்தேன். விக்டோரியா அடிக்கடி சொல்வாள். உடல் பலத்தை உபயோகிப்பதைவிட மூளையின் பலத்தை உபயோகிப்பதே பலன் தரும் என்று அமைச்சரைக் கொலை செய்யாமலேயே உன்னைத் திருப்திப் படுத்தி ஆபரேஷனுக்குப் பணமும் பெற்று சதி வேலை செய்யும் உன்னையும் மாட்டி வைக்க வழியிருக்கிறதா என்று யோசித்தேன். காலை ஏழு மணிக்கு ஒரு தெளிவுக்கு வந்து விட்டேன்."

"மரத்தைவிட்டு இறங்கினேன். ஒரு பாதுகாப்பு அதிகாரியை அணுகினேன். பூரா விபரங்களையும் சொன்னேன். என் குறி தப்பினாலும், அடுத்தடுத்து துப்பாக்கிகள் தோட்டாக்களைத் துப்பும்படி நீ செய்து வைத்த ஏற்பாடுகளைச் சொன்னேன். நீ என்னைப் போல மாற்று ஏற்பாடாக வேறு நபர்களையும் நியமித்திருக்கலாம் என்று சந்தேகப்பட்டேன். பாதுகாப்பு அதிகாரி என்னை அமைச்சர் வீட்டுக்கு

அழைத்துச் சென்று ஆலோசனை செய்தார் ஒப்புக் கொண்ட விழாவை கேன்சல் செய்ய அமைச்சர் தயாராய் இல்லை. என் முயற்சி தோற்றால் தானே மாற்று ஏற்பாட்டிற்கு வேலை வரும்? அதனால் என் முயற்சி தோற்காதபடி சினிமா பாணியில் ரத்தப் பாக்கெட்டை கழுத்துச் சட்டைக்குள் ஏற்பாடு செய்து கொண்டார் அமைச்சர். சிலையைத் திறக்க யத்தனித்த போது அந்த டம்மி வெடியை வெடிக்கச் செய்து ரத்தச் சிதறலில் சரிந்து விழுந்தார். அமைச்சர் இறந்து விட்டதாக நீ நம்பினாய், உன்னை நிதானமாக இங்கே வைத்து மடக்கியாயிற்று!"

பாதுகாப்பு அதிகாரிகள் ஸ்வாதியையும், ரஞ்சித்தையும் விலங்கிட்டு அழைத்துச் செல்ல, கமிஷனர் அகஸ்டின் கையைப் பற்றிக் குலுக்கினார்.

"கடைசி நேரத்தில் மனம் மாறி அமைச்சரைக் கொல்லாமல் தடுத்து எங்களோடு ஒத்துழைத்ததோடு என் பாராட்டுக்கள், ஆனாலும் நீ தப்பி வந்ததை சட்டம் மன்னிக்க வழியில்லை. உன் காதலியைப் பார்த்ததும் ஜெயிலுக்குப் போகத் தான் வேண்டும். ஒரு மிக முக்கிய அமைச்சரின் உயிரை நீ காப்பாற்றியிருப்பதால் உன் தண்டனைக் காலத்தைக் குறைக்க நாங்கள் நிச்சயம் எல்லா வழிகளிலும் முயற்சிகளை மேற்கொள்வோம் அகஸ்டின்" என்றார்.

ஆஸ்பத்திரியில் ஆபரேஷன் முடிந்து நல்ல படியாக உணர்வு திரும்பி கண் விழித்துப் பார்த்த விக்டோரியாவின் எதிரில் ஆனந்தக் கண்ணீருடன் நின்றுகொண்டிருந்தான் அகஸ்டின்.

அவளிடம் எல்லா விபரங்களையும் சொல்லி, "விக்டோரியா, நான் மனம் மாற நீ தான் காரணம் நீ அடிக்கடி சொல்லும் அமைதி வழி போதனை தான் காரணம்! ஒரு இந்தியனாய் இருந்து கொண்டு நமது நாட்டுக்கே துரோகம் செய்யும் கும்பலுக்குத் துணை போய் ஒரு அமைச்சரின் உயிரைப் பறிப்பதா என்று தடுமாற்றம் ஏற்பட்டது. ஒரு உயிரின் அழிவில் உன் உயிர் மீள வேண்டுமா என்று கேள்வி எழுந்தது. உனக்கு ஆபரேஷனே நடக்கா விட்டாலும் பரவாயில்லை. இந்தச் செயலைச் செய்வதில்லை என்று தீர்மானித்துதான் நான் பாதுகாப்பு அதிகாரிகளிடம் சென்று எல்லாம் சொல்லி சரணடைந்தேன் என்றான்"

விக்டோரியா கண்களில் கண்ணீர் ததும்ப, "எனக்கு ரொம்பப் பெருமையாக இருக்கிறது அகஸ்டின் நீயும் ஒரு உண்மையான இந்தியன் என்று அவன் திரும்பி வரும் வரைக் காத்திருப்பதா என்று நிரூபித்துவிட்டாய் ஒரு கொலைக்காரனுக்காக வாழ்நாள் முழுக்க சில சமயம் நினைத்த துண்டு. இப்போது சொல்கிறேன். நீ என் ஆயுளின் கடைசி நாளன்று வருவதாக இருந்தாலும் சரி அது வரை உனக்காக காத்திருப்பேன் அகஸ்டின்" என்றாள்.

அவளின் கண்ணீரைத் துடைத்துவிட்டு விடை பெற்று காவல் துறையின் ஜீப்பில் ஏறிக் கொண்டு மத்திய சிறைச்சாலையை நோக்கிப் பயணித்தான் அகஸ்டின்.

- முற்றும் -